# இறையியல் கோலங்கள்

வடிவம் 34 ஜனவரி - ஜூன் 2016 வண்ணம் 1




செயற்பாடுள்ள விசுவாசம்

திருச்சபை ஓர் இறைமக்கள் கூட்டம்

திருச்சபை ஓர் வழிபடும் சமூகம்

திருச்சபை - சாட்சிய வாழ்வு குழுமம்

திருச்சபை காலத்துக்குக்காலம் தன்னை புதுப்பிக்கின்றது

தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


Vol : 34
No. : 01
January - June : 2016

**மலர்** : 34
**வண்ணம்** : 01
**ஜனவரி – ஜீன்** : 2016



**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன்
அருட்தந்தை ஆ.ஜஸ்ரின்

நிர்வாகக் குழு : அருட்சகோ. றோ.மேரி பஸ்ரியன்
அருட்சகோ. அ.அல்வின் கிருபாகரன்
அருட்சகோ. சூ.அஜித் சுலக்ஷன்
அருட்சகோ. அ.லியாண்ஸ்
அருட்சகோ. சீ.யேசுபரநாதன்
அருட்சகோ. சூ.எட்வின் நரேஷ்

**Editor** : **Rev. Fr. T.J.Kirupaharan**

**Sub Editors** : **Rev. Fr. I. Petrus Thayaparan**
**Rev. Fr. A.Justin**

**Administrative Board** : **Rev. Bro. R.Mary Bastian**
**Rev. Bro. A. Alvin Kirubakaran**
**Rev. Bro. S. Ajith Sulaxshan**
**Rev. Bro. A.Liyans**
**Rev. Bro. S.Jesuparanathan**
**Rev. Bro. S.Edwin Naresh**

**Publication** : **St. Francis Xavier's Seminary**
**Columbuthurai, Jaffna, Sri Lanka.**
**Tel. No. : 021 222 2482, 021 222 7145**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- ஆசிரியர் உரை
- செயற்பாடுள்ள விசுவாசம்
  அருட்சகோதரன் அ.அல்வின் கிருபாகரன்
- திருச்சபை ஓர் இறைமக்கள் கூட்டம்
  அருட்தந்தை ம.வி.இ.இரவிச்சந்திரன்
- திருச்சபை ஒரு வழிபடும் சமூகம்
  அருட்தந்தை ஜேக்கப் நீக்கிலஸ்
- திருச்சபை – சாட்சிய வாழ்வு குழுமம்
  அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார்
- திருச்சபை காலத்துக்குக்காலம் தன்னை புதுப்பிக்கின்றது
  அருட்தந்தை இ.அ.ஜெராட் டீ ரொசய்ரோ அ.மதி
- புனித இருபத்துமூன்றாம் யோவான்
  அருட்சகோதரன் கு.கிருஷாந்த்
- கவிதை – மனிதா நீ மாற மாட்டாயா?
  அருட்சகோதரன் றோ.மேரி பஸ்ரியன்
- Synopsis


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

இறையியல் கோலங்கள் இதழின் ஆசிரியராக கடந்த ஏழு ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் பணி புரிந்த அருட்தந்தை மை.ஆ.போ.ற. சவுந்தரநாயகம் அடிகளாருக்கு புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவ கல்லூரி சார்பில், இறையியல் கோலங்களின் வாசகர்கள் அனைவருடனும் இணைந்து, எனது நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதழின் ஆசிரியர் பணியை ஏற்றிருக்கும் இவ்வேளையில் இறையியல் கோலங்கள் வடிவம் 34வது இதழுக்கான ஆசிரியரின் உரையை எழுதுவதில் உளப்பூரிப்படைகின்றேன். யாழ்ப்பாண கத்தோலிக்க மறை மாவட்டத்தின் இதயமாக புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவ கல்லூரி விளங்குகின்றது. மறை மாவட்டம் இந் நாட்களில் முன்னெடுத்திருக்கும் மேய்ப்புப்பணி மாநாட்டிற்கான முன்னெடுப்புக்களில் உயர் குருத்துவக்கல்லூரியின் பங்களிப்பு சிறப்பாக அமைய வேண்டும் என உணரப்படுகின்றது. இப் பங்களிப்பின் ஓர் அங்கமாக மேய்ப்புப் பணி மாநாடு தொடர்பான விடயப் பொருட்களை இவ்விதழில் தருகின்றோம்.

மேய்ப்புப் பணி மாநாட்டின் நோக்கம் - 'செயல்களோடு கூடிய விசுவாசம்' (யாக் 2:14-26) புதிதாய் வாழ்வதற்கு வழிவகுக்கும் என்பதாகும். இந்த நோக்கத்திற்கு செயல் வடிவம் வழங்க குருக்களும், துறவியர் உள்ளடங்கலாக இறை மக்களும் தாம் ஓர் இறைமக்கள் குழுமம், வழிபடும் குழுமம், சாட்சியமாகும் குழுமம் என்ற உண்மையை உணர்ந்து புதுப் பிறப்படைந்திட, நடப்பு ஆண்டின் செப்டெம்பர் 29,30 மற்றும் ஒக்டோபர் 01ம் தேதிகளில் நடைபெறவிருக்கின்ற மேய்ப்புப்பணி மாநாடு வழி ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

செயல்களோடு இணைந்த விசுவாசத்தில் ஆழ வேரூன்றி, உறுதியாக வளர்ந்து மீண்டும் புதிதாக வாழ்வோம் என்பது ஆவியிலும் இறை வார்த்தையிலும் புதிய தரிசனப் பார்வையுடன் நாம் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டிய தொடர் பயணமாகும்.

அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாடுள்ள விசுவாசம்

அருட்சகோதரன் அ.அல்வின் கிருபாகரன்

## முன்னுரை

மானிடப் பிறவி எடுத்து மண்ணை ஆண்டாலும், மனிதன் மண்ணகத்தில் நின்று முற்றிலும் மாறுபட்ட ஒன்றைத்தேடுகின்றான். தேடலை வாழ்வாக்கி, விடியல் ஒன்றை விரட்டிக் கொண்டு ஓடும் மனிதனுக்கு விசுவாசம் ஒன்றே சக்தி கொடுக்கின்றது. இன்று பலரும் 'விசுவாசம்' என்ற கருப்பொருளை அல்லது விடயத்தை 'மதம்சார்' சொற்பதம் என எண்ணி அலட்சியப்படுத்துகின்றனர். உண்மையில் விசுவாசம் என்பது மதம் சார் விடயமாக இருந்தாலும் இலட்சியமுள்ள அல்லது எதிர்காலம் பற்றிய தூரநோக்குள்ள எந்த மனிதனுக்கும் விசுவாசம் அல்லது நம்பிக்கை இன்றியமையாத




வாழ்க்கைத்தத்துவம். பகுத்தறிவுள்ள மனிதனுக்கு கடவுள் அல்லது மதம் என்பது யதார்த்தம் என தெளிவாகப் புரியும். மதத்தை, கடவுளை மறுப்பவர்களுக்கும் பகுத்தறிவு உண்டு. ஆனால் பகுத்தறிவின் இன்னொரு பகுதியான விசுவாசத்தை அவர்கள் விளங்கிக் கொள்ளாமையே கடவுள் மறுப்புக்கு காரணமாகி விடுகின்றது. ஆக விசுவாசம் அல்லது நம்பிக்கை என்பது வெறும் கண்மூடித்தனமான கற்பனையோ அல்லது கட்டுக்கதையோ அல்ல, மாறாக காரண காரியங்களோடும் (reason & action) ஆழ்ந்த அறிவோடும், மனித குலத்திற்கே மட்டும் உரித்தான பகுத்தறிவோடும் பின்னிப்பிணைந்த ஒன்று.

கிறிஸ்தவர்களாகிய நாமும் ஏனைய சமயத்தவர்களும் விசுவாசம் என்ற வித்திலிருந்துதான் இன்று விருட்சமாகி நிற்கின்றோம். விசுவாசம் எவ்வகையில் வாழ்க்கைக்கு அவசியமானது என்ற வினாவுக்கான விடைகள் பலருக்கும் தெளிவில்லாமல் இருக்கின்றன. ஏனெனில் விசுவாசம் என்பது ஐம்புலன்களால் உணரமுடியாத யதார்த்தம். மனித அறிவுக்கும் சிந்தனைக்கும் உட்பட்ட, ஆனால் வெளிப்படையாக காணமுடியாத உண்மை நிலையே விசுவாசம். ஆனால் சிந்திக்கத்தெரிந்த அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்தினால் மட்டுமே நாம் வாழ்க்கைப் பயணத்தை தொடர்கின்றோம் என்பது புரியும். ஏனெனில், "உலகை வெல்வது நம் நம்பிக்கையே" (1யோவான் 5:4). விசுவாசக்கண்ணோடு நோக்குகின்ற போது எமது வாழ்வின் இலக்கு இறைவனில் நிறைவடைகின்ற நிலைவாழ்வு என்று புரியும். ஏனெனில் இவ்வுலகம் எமக்கு ஒரு வித பயணப்பாதை மாத்திரமே. பயணஇலக்கு அல்லது குறிக்கோள் இறைவனை முகமுகமாகத் தரிசிக்கின்ற உன்னத நிலையே. அதுவரையில் விசுவாசத்தில் நாம் இன்னும் ஆழ வேரூன்றி வளர வேண்டும். அது எப்படி சாத்தியம்? ஒரே வழி, நாம் கொண்டுள்ள விசுவாசத்திற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் ஏனெனில் 'நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" (யாக்: 2:17). விசுவாசத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதன் அவசியம், அதற்கான நடைமுறை செயற்பாடுகள் பற்றிய ஆய்வே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதற்கு முன்னர், விசுவாசமும் நம்பிக்கையும் ஒன்றுதானா? அல்லது இருவேறு கருத்துடைய பதங்களா? என்ற தெளிவின்மை பலருக்கும் உண்டு. இதற்கான விவிலிய விளக்கத்தை நோக்குவோம்.

## 'விசுவாசம்', 'நம்பிக்கை' இரண்டும் இருவேறு கருத்துக்களா?

திருவிவிலியத்தின் அடிப்படையில் நோக்குகின்ற போது இரு பதங்களும் ஒரே கருத்துடையவையே. விசுவாசம் என்ற பழைய மொழி பெயர்ப்பின் புதிய மொழி பெயர்ப்பே 'நம்பிக்கை' ஆகும். ஆனால் பழைய மொழிபெயர்ப்பில் கூட விசுவாசம், நம்பிக்கை ஆகிய இரு பதங்களும் இருவேறு கருத்துக்களை கொண்டிருக்கின்றதே என்ற குழப்பம் எழலாம். பழைய மொழிபெயர்ப்பின் படி இரு பதங்களும் இருவேறு கருத்துக்களைத் தான் கொண்டிருந்தன. ஆனால் புதிய மொழி பெயர்ப்பில் விசுவாசம் என்ற பதத்திற்கு நம்பிக்கை என்ற புதிய மொழி பெயர்ப்பையும், நம்பிக்கை என்ற பழைய மொழிபெயர்ப்பிற்கு 'எதிர்நோக்கு' என்ற புதிய மொழி பெயர்ப்பையும் தமிழ் விவிலிய ஆய்வாளர்கள் புகுத்தியுள்ளனர் (உரோ 5:1,5 1 கொரி 13:3).

| பழைய மொழிபெயர்ப்பு | | புதிய மொழிபெயர்ப்பு |
|---|---|---|
| விசுவாசம் | = | நம்பிக்கை |
| நம்பிக்கை | = | எதிர்நோக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக விசுவாசம், நம்பிக்கை ஆகிய இரு பதங்களும் புதிய மொழி பெயர்ப்பின் படி ஒரே கருத்தையே கொண்டுள்ளன.

## செயலற்ற விசுவாசம் செத்ததே

என்னிடம் மிகப்பெரிய நல்ல விளைச்சல் நிலம் ஒன்று உண்டு, நான் இந்த நிலத்தை நம்பியே வாழ்கிறேன் என சொல்லிக்கொண்டு அந்த நல் நிலத்தை பண்படுத்தாமலும், எதனையும் விதைக்காமலும் இருந்தால் நிலமும் என் நிலைமையும் அந்தோ பரிதாபமாகிவிடும். அவ்வாறே எமது விசுவாசமும். நான் கடவுளை முழுமையாக விசுவசிக்கிறேன் எனச் சொல்லிக் கொண்டு கைகால்களை முடக்கியவாறு கட்டிலில் படுத்துக் கொண்டால் என் விசுவாசத்திற்கு சன்மானம் வெறும் சாவுமட்டுமே. ஏனெனில் "நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்ற தாயிருக்கும்" (யாக் 2:17). கடவுளை விசுவாசக் கண்ணோடு நோக்குகின்றவன் ஒருபோதும் கண்மூடித்தூங்கி காலத்தை வீணாக்கமாட்டான். விசுவசிக்கின் றோமே அதன் விளைவுகளை அனுபவிக்காவிட்டால் விசுவாசத்தின் பொருள் ஏது? ஆக, யாக்கோப்பின் கூற்றுப்படி நம்பிக்கை என்பது நற்செயல்களில் மட்டுமே காணக்கூடிய ஒன்று என்பது தெளிவு (யாக் 2:18). இயேசுவின் மலைப்பொழிவில் "மக்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத்தந்தையைப் போற்றிப் புகழ்வார்களாக" (மத் 5:18) என்கிறார்.

"செயல்களின்றி நம்பிக்கையினால் மாத்திரம் நேர்மையாளர் பிழைப்பார்" (Solo Fidei) என்று முழக்கமிட்டார் மாட்டீன் லூதர். இக்கருத்தில் கடுகளவும் எமக்கு உடன்பாடில்லை. எமது இறையியல் சிந்தனைகளில் நம்பிக்கை அல்லது விசுவாசம் என்பது முக்கியமான ஒன்றாக இருந்தாலும் மாட்டீன் லூதரின் கூற்றானது தனித்து முழுமை இல்லை என்பது தெளிவு. கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வு என்ற மையப்பொருளோடு இக்கருத்தினை இணைத்துப் பார்க்க தவறிவிட்டார் மாட்டீன் லூதர். நம்பிக்கை விடயத்தில் ஒரே கொள்கையில் நாம் முடங்கி விடாது, நம்பிக்கைக்கு ஏற்ற நற்செயல்களை ஒரு தண்டவாளத்தின் இரு கோடுகளைப்போல இணைத்துப் பயணிக்க வேண்டும். நம்பிக்கையோடு கூடிய நற்செயல்கள் பற்றிய படிப்பினையின் தாற்பரியத்தை அறிய நிச்சயமாக யாக்கோபு திருமுகத்தை நாம் வாசித்து வாழ்வாக்க வேண்டும். ஏனெனில் "உயிர் இல்லாத உடல்போல, செயல்களில்லாத நம்பிக்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்ததே" (யாக் 2:17-26) என்ற ஆழமான நம்பிக்கை இறையியலை யாக்கோபு மிகத்தெளிவாக விளக்குகின்றார். யாக்கோபு கிறிஸ்துவின் உன்னத படிப்பினையான செயற்பாடுள்ள விசுவாசத்திற்கு மேலும் வலுச்சேர்க்கின்றார். "என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளப்படி செயற்படுபவரே செல்வர்" (மத் 7:21) என்பது இயேசுவின் போதனை. ஆண்டவரை நம்புபவன் மட்டுமே ஆண்டவரே, ஆண்டவரே என கூக்குரலிடுவான். ஆனால் விண்ணரசை உரிமைப் பேறாகப் பெறுவதற்கு கிறிஸ்துவின் போதனைக்கேற்ப இறைத் தந்தையின் திருவுளப்படி செயற்படவேண்டும். ஒப்பீட்டளவில் செயற்பாட்டை விட விசுவசிப்பது மிக எளிது. ஆனால் நாம் விசுவசிப்பதை செயல்களில் வெளிக்கொணர்வது மிகக் கடினம். கடினம் என்பது முடியாதது என்பது பொருளல்ல, மாறாக முயற்சியும் முழுமனச்சம்மதமும் கடினத்தையும் கனிய வைக்கும். கடவுள் அன்பாய் இருக்கிறார் என அடித்துக்கூறுகிறோம். காரணம் கடவுளின் அன்பில் எமக்கு ஆழமான நம்பிக்கை. அதே வேளையில் கடவுள் காட்டுகின்ற அன்பை எம் அன்புச்செயல்களால் அயலானுக்கு காட்டவில்லை என்றால் அன்பிற்கு அர்த்தம் ஏது? ஆக விசுவாசம் உயிருள்ளதாக இருக்க அதற்கேற்ற செயல்கள் நிச்சயமாக வாழ்வில் வெளிப்படவேண்டும்.

## விவிலியத்தில் செயற்பாடுள்ள விசுவாசம்

பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் திருச்சபை விசுவாசம் என்கிற மாபெரும் வெளிச்சத்தில் இறையுறவை தொடர்கின்றது. விவிலியத்தில் இடம் பெறுகின்ற ஆபேல் தொடக்கம் ஆதிக்கிறிஸ்தவர்கள் வரைக்கும் கடவுளை, கடவுளின் மறையுண்மைகளை, வெளிப்பாடுகளை, விடுக்கப்பட்ட நற்செய்திகளை விசுவசித்தனர், விசுவசித்ததை வாழ்வில் செயற்படுத்தினர். அதன் விளைவே விருட்சமாகிவிட்ட திருச்சபை. எடுத்துக்காட்டாக, ஆபேல் ஆண்டவரை விசுவசித்தார், அதனால் அர்த்தமுள்ள காணிக்கையை அவருக்கு அர்ப்பணித்தார் (தொ.நூ4:4). நோவா நம்பினார், பேழை செய்து பிழைத்துக் கொண்டார் (தொ.நூ 6:13-22). ஆபிரகாம் விசுவசித்தார், விளைவாக வீட்டை, நாட்டை கைவிட்டு கடவுள் வாக்களித்த நாட்டை உரிமையாக்கினார் (தொ.நூ 12:1-5). இவ்வாறாக பழைய ஏற்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியல் இடும் அளவிற்கு பலர் விசுவசித்தனர்; தாம் விசுவசித்ததை செயலில் காண்பித்தனர். புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவான் தொடக்கம் விசுவாசத்தின் அன்னை மரியாள், நம்பிக்கைக்குரிய திருத்தூதர்கள், மறை சாட்சிகள் என பலர் கிறிஸ்துவை, இறை வெளிப் பாட்டை நம்பினர்; நம்பியதை தம் நற்செயல்களால் சான்று பகர்ந்தனர். எடுத்துக்காட்டாக ஆதித்திருச்சபையின் செயற்பாடுள்ள நம்பிக்கையே திருச்சபை வேகமாக பரவ வழிசமைத்தது. "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்..." (தி.ப 2:44) என நம்பிக்கையை வாழ்வாக்கிய திருச்சபை பற்றி திருத்தூதர் பணிகள் நூலின் ஆசிரியர் மிகத்தெளிவாக விளக்குகிறார்.

இவர்கள் வார்த்தையளவில் விசுவாசத்தை கட்டுப்படுத்தியிருந்தால் விவிலியம் வெறும் புராணமாகி புதைந்து போயிருக்கும். திருச்சபையும் வரலாற்றில் வாழ்ந்து மடிந்த ஒரு அரசாகவே இருந்திருக்கும். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் 11:33-38 வசனங்களில், "நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள்; நேர்மையாகச் செயற்பட்டார்கள்; கடவுள் வாக்களித்ததைப் பெற்றார்கள்..." என நம்பிக்கையின் செயற்பாடுகள் பலவற்றை ஆசிரியர் பட்டியல் இட்டுச்செல்வதைக் காண்கின்றோம். விசுவாசத்தோடு விவிலியத்தை கையேந்தும் எவரும் நற்செயல்களால் சான்று பகர வேண்டும், ஏனெனில் "நாம் கடவுளின் கைவேலைப்பாடு, நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கின்றோம்" (எபே 2:10).

## செயலாற்றும் திருச்சபை

கிறிஸ்துவின் உயிர்ப்பில் உயிரூட்டம் பெற்று ஆவியின் ஆளுகையால் அபிஷேகம் பெற்ற திருச்சபை பல தடைகள் தாண்டி விண்ணரசை நோக்கி பயணிக்கிறது. எதிர் நோக்கி இருக்கும் விண்ணரசு கிடைக்கும் என்னும் எதிர்நோக்கில் (எபி 11:1) பயணிக்கிறது. காரணம் திருச்சபை விசுவாசிகளின் திருக்கூட்டம். மேலாக தான் விசுவசித்ததை செயற்படுத்தும், சான்று பகரும் திருக்கூட்டம். அதனால்தான் தடைகளை தாண்டி சோதனைகளை வென்று பயணிக்கின்றது. செயலற்ற விசுவாசத்திற்கு ஒருபோதும் சோதனை வருவதில்லை. காரணம் செயலற்ற விசுவாசத்திற்கு வளர்ச்சி இருக்காது. வளர்ச்சியைக்கண்டுதான் தீயவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிப்பான். செயலற்ற விசுவாசம் தேங்கி நிற்கும் நீர். அங்கு ஓட்டம் இருக்காது. ஆக செயற்படும் விசுவாசத்திற்கு கல்லெறிகள், வசை மொழிகள், தடைகள் பல நேரிடும். திருச்சபை வரலாறு இதற்கு சான்று பகரும். ஈராயிரம் ஆண்டுகளாய் பயணிக்கின்ற திருச்சபைக்கு அதன் செயற்படும் விசுவாசமுமே சக்கரங்கள். இதனை தூய பேதுரு தனது முதல் திருமுகத்தில் மிக அழகாகக்கூறுகின்றார், "இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகைச்சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும் அந்நாளில் பேருவகை கொள்வீகள். அழியக்கூடிய பொன், நெருப்பினால் புடமிடப்படுகின்றது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள்..." (1பேதுறு 1:6-7) விசுவாசத்தோடு பயணிக்கின்ற எமது திருச்சபை காலத்துக்குக் காலம் தேவைக்கேற்ப தனது பயணப் பாதையிலிருந்து சற்றும் சறுக்காமல் தன்னை புதுப்பித்தவண்ணம் பயணிக்கின்றது. எவ்வாறெனில் தனது சான்றான வாழ்க்கை முறையினாலேயே திருச்சபை தன்னை புதுப்பிக்கின்றது. இதனை எமது இளைப்பாறிய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் "நம்பிக்கையின் வாயில்" (Porta Fidei) என்ற சுற்று மடலில் 6ம் அதிகாரத்தில் இவ்வாறு கூறுகின்றார், "திருச்சபையைப் புதுப்பிப்பது விசுவாசிகளின் சான்றான வாழ்க்கையினால் சாத்தியமாகின்றது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற உண்மையின் வார்த்தையை விசுவாசிகள் உலகில் வாழ்வதன் வழியாக அவர்கள் அதை ஒளிரச் செய்கின்றார்கள்." மேலும் விசுவாசிகளின் சாட்சிய வாழ்வு நம்பிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிக்க வேண்டும் என்றும் இச்சுற்றுமடலில் திருத்தந்தை அவர்கள் வலியுறுத்துகின்றார்.

## கிறிஸ்தவ விசுவாசம் வாழ்வதற்கான புதிய மறைபரப்பு

கிறிஸ்தவ வாழ்வின் போராட்டம் பற்றி தூய பவுல் எபேசியருக்கு எழுதிய கடிதம் 6:10-17 வசனங்கள் பல யதார்த்தங்களை பேசுகின்றன. இப்போராட்டத்தில் கடவுள் அருளும் படைக்கலன்கள் சிலவற்றை பவுல் குறிப்பிடுகின்றார். அவற்றில் நம்பிக்கை என்பதும் ஒரு படைக்கலன் ஆகும். போன் வீரன் தனது படைக்கலனை வீட்டில் வைத்து விட்டு போருக்கு செல்வானா? அவ்வாறே ஒவ்வொரு கிறிஸ்தவனும் நம்பிக்கை என்ற போர்க்கலனை தமது வாழ்வில் தாங்கிச்செல்ல வேண்டும். ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வு என்பது உலகியல் வாழ்விலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் மாறுபட்டது. உலகில் இருந்து கொண்டு உலகோடு போராடும் ஒரு விசித்திரமான போராட்டம். இப்போராட்டத்திற்கு வலிமையும் வீரமும் தருவது விசுவாசமே. எமக்குள் செயற்படும் இந்த விசுவாசத்தை எமது வாழ்வியல் விழுமியங்களினூடாக மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். கிறிஸ்துவின் மேலான அழைப்பும் இதுவே. பேதுரு மறுதலிப்பார் என முன்னறிவித்த இயேசு, "சீமோனே, சீமோனே இதோ கோதுமையைப்போல் உங்களைப்புடைக்க சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" (லூக் 22:31-32) என்கிறார். ஆக கிறிஸ்தவர்களாகிய நாம் சிறிய சிறிய விசுவாசச்செயல்களுடாக அனைவரும் வாழ்வதற் கான புதிய மறைபரப்புப்பாதையை அகலத்திறக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். உலகியல் மாயைகள், கண்ணைக்கவரும் கவர்ச்சிகள், வாழ்வை வேகப்படுத்தும் புதிய கண்டுபிடிப்புக்கள், மேலதிக முற்றிப்போன சுயநலப்போக்கு போன்ற அனைத்தும் எமது விசுவாசத்தை முட்டி மோதுகின்றன. தப்பிக்கொள்ள ஒரே வழி நாம் விசுவசிப்பதை வாழ்வாக்கி, வாழ்வாக்கியதை மறைபரப்பாக்குவதே. இறைவார்த்தையும் திருச்சபையின் படிப்பினைகளும் செயற்பாடுள்ள விசுவாசத்திற்கான அழைப்பை தொடர்ந்து எம்மிடம் விடுக்கின்றன. 'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து எம்மை ஏமாற்றிக்கொள்ளாமல் அதன்படி நடக்கிறவர்களாகவும் இருப்போம்' (யாக் 1:22).

## இறுதியாக...

'ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவை யானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, "நலமே சென்று வாருங்கள், குளிர்காய்ந்து கொள்ளுங்கள், பசியாற்றிக் கொள்ளுங்கள், என்பாரென்றால் அதனால் என்ன பயன் (யாக் 2:15-16). செயலற்ற விசுவாசம் பயனற்றது அல்லது போலியானது என்பதை தெட்டத்தெளிவாக யாக்கோபு மேற்சொன்ன உதாரணத்தினூ டாக விளக்குகின்றார். சாத்தான்கள் கூட கடவுளை நம்புகின்றன (யாக் 2:19). பின்னர் ஏன் அவைகளை சாத்தான்கள் என்கிறோம்? காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிறது, அங்கு நற்காரியங்கள் நடைபெறவில்லை என்று. மீட்படைய நம்பிக்கை மட்டும் போதுமென்றால் பேய்களும் விண்ணகத்தில் அல்லவா வீடமைக்கும்? ஆக, நற்செயல்களில் தென்படும் விசுவாசம் மட்டுமே எமக்கு விடுதலை அளிக்கும். நம்பிக்கை என்னும் கேடயத்தைக் கைகளில் தாங்கிக் கொண்டால் மட்டும் போதாது. தூய வாழ்வை நோக்கி எம் கால்கள் நடந்து செல்ல வேண்டும். நாவால் மட்டுமல்ல நம் வாழ்வால், நற்சான்றுகளால் விசுவாசத்தை விருட்சமாக்கி பலருக்கும் பயன்கொடுக்க வேண்டும்.

## துணை நின்ற நூல்கள்

இறை நம்பிக்கை ஆண்டு திருமடல் "நம்பிக்கையின் வாயில்" (Porta Fidei) திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்

கத்தோலிக்க இறை நம்பிக்கை வேர்கள்
தொகுப்பாசிரியர்: தஞ்சை டோமி

**Control your ANGER because it is just one letter away from DANGER**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை ஒரு இறை மக்கள் கூட்டம்

## *இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில்...*

அருட்தந்தை ம.வி.இ.இரவிச்சந்திரன்

1985ல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இருபது ஆண்டுகளின் நிறைவில் கூட்டப்பட்ட விசேட ஆயர் மன்ற அமர்வு பற்றி தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிடும், ஓய்வு பெற்ற திருத்தந்தை 16வது பெனடிக்ற் அவர்கள் "சங்கத்தின் திருச்சபையியலை சாரப் படுத்திப் பார்க்கும் முயற்சி சங்கத்தின் இருபது ஆண்டுகள் நிறைவை ஒட்டி 1985ல் கூட்டப்பட்ட விசேட ஆயர் மன்றத்தின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சாரப்படுத்தும் முயற்சி ஒரு அடிப்படைக்கருத்தில் மையம் கொண்டிருந்தது. அது ஒன்றிப்பு திருச்சபையியல் (Ecclesiology of Communion) ஆகும். இந்த ஒன்றிப்பு திருச்சபையியல் சங்கத்தின் திருச்சபையியலின் முக்கிய விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது" என்று குறிப்பிடுகிறார்.



திருச்சபை ஒரு மறைபொருள் என்று குறிப்பிடும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் அந்த மறைபொருளை விளக்குவதற்கு பல்வேறு உருவகங்களை பயன்படுத்துகிறது. அதில் இரண்டு உருவகங்கள் முக்கியமானவை. திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் என்பதும் திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம் என்பதுமே இந்த இரண்டு உருவகங்களாகும். இவை இரண்டினுள்ளும் திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம் என்பதற்கு முன்னிடம் கொடுத்து அதனை திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டின் இரண்டாவது இயலின் தலையங்கங்கமாகவே சங்கம் பயன்படுத்துகிறது. இவ்விரண்டு உருவகங்களும், முக்கியமாக திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம் என்ற உருவகம், திருச்சபையில் குழுமத் தன்மையை இரண்டாம் வத்திக்கான் சங்கம் எவ்வளவு தூரத்திற்கு வலியுறுத்துகிறது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் உத்தியோகபூர்வ புரிந்துணர்வில் படிமுறை அமைப்பாக புரிந்து கொள்ளப்பட்டிருந்த திருச்சபையை ஒரு இறைமக்கள் சமுதாயமாக சிந்தித்தது சங்கத்தில் ஏற்பட்ட வேரோட்டமான மாற்றமாகும். உண்மையில் திருச்சபையை இறைமக்கள் சமூகமாக புரிந்து கொள்வதென்பது ஒரு புதிய விடயமல்ல மாறாக திருச்சபையை அதற்கே உரித்தான தொடக்க நிலையில் புரிந்து கொள்வதென்பதே இதன் சிறப்பம்சமாகும். இது புதிய பார்வையல்ல மாறாக புதுப்பிக்கப்பட்ட பார்வை.

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் ஒரு இறைமக்கள் சமூகமாக தம்மைப் புரிந்து கொண்டனர். சீனாய் மலையடிவாரத்தில் இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின்படி "நான் உங்கள் தந்தையாயிருப்பேன் நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள்" என்று இறைவன் கூறுகிறார். இந்த உடன்படிக்கையை மீறி இஸ்ராயேல் மக்கள் விலகிச் சென்றபோது இறைவன் இறைவாக்கினர் வழியாக புதியதொரு உடன்படிக்கையைப் பற்றிப் பேசுகிறார் (எரே. 31:31-34). இப்புதிய உடன்படிக்கை கிறிஸ்துவிலே நிறைவுற்றபோது கிறிஸ்துவிலே நம்பிக்கை கொண்ட அனைவரும் புதியதொரு மக்களினம் ஆகின்றனர் (1கொரி 11:25). இப்புதிய உடன்படிக்கையின்படி திருச்சபை இறைமக்கள் சமுதாயமாகிறது என பேதுரு தனது மடலில் குறிப்பிடுகின்றார். "தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் திருக்கூட்டத்தினர், தூய மக்களினத்தார், அவரது உரிமைச்சொத்தான மக்கள்" (1பேதுரு 2:9-10). இவ்வாறு புதிய ஏற்பாட்டில் திருச்சபையை இறைமக்கள் சமூகமாக புரிந்து கொண்டதை உருவகமாகப் பயன்படுத்தி சங்கம் தனது திருச்சபையியலை விளங்கப்படுத்துகிறது.

"கடவுளின் இந்தப் புதிய மக்கள் குழுமத்தில் சேர எல்லா மக்களும் அழைக்கப் பெறுகிறார்கள். எனவே ஒருங்கிணைந்த இந்த ஒரே குலம் எக்காலத்திலும் அனைத்துலகிலும் பரவவேண்டும்" என்ற விருப்பத்தை வெளியிடும் திருச்சங்கம் "தனித்தனியாக ஒருவருக்கொருவர் தொடர்பேதுமற்ற முறையில் மக்களைத் தூய்மைப்படுத்தவும், ஈடேற்றவும் கடவுள் விரும்பவில்லை மாறாக தம்மை உண்மையில் ஏற்றுக்கொண்டு தூய்மையாய் தமக்கு ஊழியம் செய்யும் மக்கள் குலமாகவே அவர்களை நிறுவ விழைந்தார்" என்கிறது. இறைவன் தமது திட்டத்திலேயே திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மக்கள் குலமாக இருக்கவேண்டும் என்று விழைந்தார் என்று கூறுவதன் மூலம் திருச்சபையின் குழுமவாழ்வை மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. இதே கருத்தை சங்கம் பிறிதொரு ஏட்டில் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"ஒருவருக்கொருவர் தொடர்பு ஏதுமற்ற முறையில் மனிதர்கள் தனித்தனி ஆள்களாகவே தம் வாழ்வில் பங்கு கொள்வதன்று கடவுளுடைய விருப்பம். மாறாக பிரிந்து சிதறிக் கிடந்த தம் பிள்ளைகளை ஒன்றாய் சேர்த்து ஒரு மக்கள் குழுவாக நிறுவுவதே கடவுளுடைய விருப்பமாக இருந்தது."

இன்றைய உலகில் திருச்சபையின் பணிபற்றி கூறுவதற்கு என எழுதப்பட்ட மறைக்கொள்கைத்திரட்டு திருச்சபையை மட்டும் ஒரு மக்கள் குலமாக அடையாளம் காணவில்லை மாறாக அதற்கு மேலாக எல்லா மனிதர்களும் இயல்பிலே சமூகப்பண்பு கொண்டவர்கள் என கூறுகிறது. கடவுள் மனிதரைத் தனியராக படைக்கவில்லை ஏனெனில் தொடக்கத்திலிருந்தே "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ 1:27). அவர்களுடைய கூட்டு வாழ்க்கை மனித ஆள்களிடையே எழும் ஒன்றிப்பின் முதல் வெளிப்பாடாகும். ஏனெனில் மனிதர் தம் ஆழ்ந்த இயல்பிலேயே சமூகப்பண்புடையவர்கள், பிறரோடு உறவு கொள்ளாமல் அவர்களால் வாழவோ தம் திறமைகளை வளர்த்துக் கொள்ளவோ முடியாது."

இவ்வாறு இரண்டாம் வத்திக்கான் சங்கமானது திருச்சபையை மட்டுமன்று முழு மனுக்குலத்தையுமே ஒரு குழும வாழ்வுக்கு அழைத்து நிற்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இந்தப்பார்வை பற்றி குறிப்பிடும் போது குஞ்சேரிய பத்தில் என்பார் பின்வருமாறு கூறுகிறார்.

"இறைவனின் மீட்புத்திட்டமென்பது முழு மனிதகுலத்தையும் ஒரு குடும்பமாக ஒரு குழுமமாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டது. இஸ்ராயேல் மக்களின் அழைப்போடு ஆரம்பித்த இப்பயணம் இயேசுக் கிறிஸ்துவிலும், புதிய இறைமக்கள் சமுதாயத்துக்கான அழைப்பிலும், வேகமும் புதிய திசையும் பெறுகிறது. திருச்சபையில் ஒரு புதிய இறைமக்கள் சமூகத்தை இணைக்கும் செயற்பாடானது மீட்பு வரலாற்றின் முடிவு அல்ல. மாறாக அனைத்து மக்களையும் இறையாட்சியில் இணைக்கும் முடிவுக்கான ஒரு வழியாகும். வேறு வார்த்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதானால் திருச்சபை இறைமக்கள் சமுதாயமாக திகழ்வதென்பது முழு மனுக்குலமும் இறுதியில் அடைய வேண்டிய ஒன்றிணைப்புக்கான ஒரு அடையாளமாகும்.”

மேற்படி கருத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத்திரட்டின் முகப்பு வசனமே தெளிவாக பறைசாற்றி நிற்கிறது. “கிறிஸ்துவில் இத்திருச்சபை ஒரு அருள் அடையாளம் போல் விளங்குகிறது. அதாவது இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும் மனித குலம் முழுவதன் ஒற்றுமைக்குமான அடையாளமும் கருவியுமாய் உள்ளது....” மேலும், கிறிஸ்துவில் இன்னும் ஒரு நிறைவான ஒன்றிப்பை எல்லா மனிதரும் பெறுவதற்கும் இன்றைய சூழ்நிலைகளிலே திருச்சபையின் பணி அவசரமாகத்தேவைப்படுகிறது.”

இவ்வாறு முழு மனுக்குலத்தினிடையே ஒன்றிப்பு, பிரிந்து நிற்கும் சபைகளிடையே ஒன்றிப்பு, ஏனைய மதங்களுடனே ஒன்றிப்பு, கடவுளை ஏற்றுக் கொள்ளாதவருடனும் ஒன்றிப்பு, இதற்கு அவசியமாக இறைமக்கள் சமூகமாக அழைப்புப் பெற்றிருக்கும் திருச்சபையினுள்ளே ஒன்றிப்பு என இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒன்றிப்பின் அவசியத்தை மீள மீள வலியுறுத்துகிறது. அதனால்தான் சங்கத்தின் திருச்சபை பற்றிய புரிதலின் சாரம் ஒன்றிப்பு திருச்சபையியல் என்று கருதுவதில் தவறில்லை என்பது புலனாகிறது. இவ்வாறு ஒன்றிப்பை குழுமமாக வாழும் அவசியத்தை திருச்சங்கம் மிகவே வலியுறுத்தினாலும் அதை எவ்வாறு நடைமுறைக்கு கொண்டு வருவது அல்லது நடைமுறையில் குழுமவாழ்வை உருவாக்கும் நடைமுறைகள் எவை என்பதை சங்கம் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஆயினும் சங்கம் கோட்பாட்டு ரீதியாக முன்வைத்த திருச்சபை பற்றிய இந்த குழுமப்பார்வையை நடைமுறைப்படுத்தும் ஒரு வடிவமாகவே சமகாலத்தில் தோன்றிய குழும வாழ்வு இயக்கத்தை நாம் அடையாளம் காண முடியும்.

## இரண்டாம் வத்திக்கான் சங்கமும் தற்கால கிறிஸ்தவ குழும வாழ்வு இயக்கமும்.

திருச்சபை தனது போதனைகளால் பொதுநிலையினருக்கும், திருநிலையினருக்குமான இடைவெளியை அகற்றி அவர்களை ஒரு இறைமக்கள் சமூகம் என அழைக்கிறது. அந்த வகையில் சங்கத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பிருந்த பிளவுநிலையைக் கடந்து ஒரு இறைமக்கள் சமூகம் என்ற உணர்வுக்குள் திருச்சபையின் உறுப்பினர் அனைவரும் வரவேண்டிய தேவை இருக்கிறது. தனிமனிதர்களாக இறைவன் மனிதர்களை அழைக்கவில்லை. ஒரு மக்களினமாக ஒரு குழுமமாகவே அழைக்கிறார் என்று திருச்சங்கம் கற்பிக்கிறது. ஆகவே மக்கள் தனித்தனி தீவுகளாக வாழும் தமது நிலையிலிருந்து விடுபட்டு ஒரு மக்கள் குழாமாக இணைய ஆவன செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. பிற சமயத்தவர்களோடும், பிற கிறிஸ்தவ சபைகளோடும், ஏன் கடவுள் நம்பிக்கையற்றவர்களோடும் கூட ஒன்றிப்பில் வளர வேண்டும் என்று திருச்சங்கம் சொல்கிறது. ஆகவே இவர்களோடு உரையாடி, உறவாடக்கூடிய குழுமமாக திருச்சபை மலர வேண்டிய தேவை இருக்கிறது. அகன்று விரிந்த உலகத்தின் போர், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வறுமை, கல்வி போன்ற பல்வேறு கரிசனைகளிலும் திருச்சபை பங்கேற்று பணியாற்ற வேண்டும் என்று சங்கம் எதிர்பார்க்கிறது. இதற்குத் தேவையான அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய உயரிய கோட்பாடுகளை திருச்சங்கம் முன்வைக்கும் போது திருச்சபையை நடைமுறையில் அதற்கேற்ப புதுப்பிப்பது என்பதும் உரிய அமைப்புக்கள் வாழ்க்கை முறைகளைத் தோற்றுவிப்பது என்பதும் சங்கத்திற்கு பின்னான திருச்சபைக்கு ஒரு சவாலாகவே அமைகிறது. இந்நிலையில் எத்திசையில் நடைமுறையாக திருச்சபை பயணிக்க வேண்டும் என்ற ஒரு கொடி காட்டலையும் சங்கம் தருகிறது.

"தங்கள் அருட்பணியாளருடன் இணைத்தலையும் புதிய ஏற்பாட்டில் சபைகள் என அழைக்கப்படுபவையுமான நம்பிக்கை கொண்டோரின் முறையான எல்லா வட்டாரச்சபைகளிலும் கிறிஸ்துவின் இத்திருச்சபை உடனிருக்கிறது. ஏனெனில் தங்களது வட்டாரத்தில் தூய ஆவி தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ளத்துறுதியோடும் (காண்க 1தெச. 1:5) ஆண்டவரால் அழைக்கப்பட்ட புது மக்களே இச்சபைகள். இச்சபைகளில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றுவதனால் நம்பிக்கை கொண்டோர் ஒன்று சேர்க்கப்பெறுகிறார்கள். மேலும் ஆண்டவரின் உடலாலும் இரத்தத்தாலும் சகோதரர் சகோதரிகளாலான குழுவாக எல்லோரும் இணையுமாறு ஆண்டவரது இராவுணவாகிய மறைநிகழ்ச்சி கொண்டாடப் படுகிறது. ஆயர் திருப்பணி ஆற்ற பலிப்பீடத்தைச் சுற்றி குழுமி இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச்சபைகளிலும் மறையுடலின் அன்பு, ஒற்றுமை என்னும் அடையாளம் தெளிவாக புலப்படுகிறது. மறையுடலின் இவ்வொற்றுமை இல்லை என்றால் நிறைவாழ்வு இல்லை. பல முறைகளில் இச்சபைகள் சிறியனவாயும், வறியனவாயும் இருந்த போதிலும் அல்லது சிதறிக்கிடந்த போதிலும் இவைகளில் கிறிஸ்து உடனிருக்கிறார். இவருடைய ஆற்றலால்தான் ஒரே தூய பொதுவான, திருத்தூதர் திருச்சபை ஒன்று கூட்டப்பெறுகிறது.

தொடக்கத்திருச்சபை பல்வேறு இடங்களில் இல்லங்களில் கூடிவந்த சபைகளின் இணைவாக இருந்ததையும் இவ்வாறு கூடிவந்த சபைகளில் தான் திருச்சபை வாழப்பட்டதையும் சங்கத்தின் இம்மேற்கோள் ஏற்றுக்கொள்கிறது. அது மட்டுமல்லாமல் சிதறிவாழும் இச்சிறிய, வறிய சபைகள் ஆயர் தலைமையில் நற்கருணைக் கொண்டாட்டத்தில் இணைந்திருக்கும்போது முழுத்திருச்சபையின் துல்லியமான வெளிப்படாக திகழத்தக்கவை என்பதையும் சங்கம் உறுதிசெய்கிறது. தொடக்கத் திருச்சபையில் காணப்பட்டது போன்ற சிறிய சிறிய குழுக்களில்தான் திருச்சங்கம் எதிர்பார்க்கும் திருச்சபை உருவாக முடியும் என்பதும் தெளிவாகிறது.

ஆகவே திருச்சங்கத்தின் கவனத்தை நேரடியாகப் பெற்றிருக்கா விட்டாலும், திருச்சங்கத்திற்கு சமகாலத்தில் தென் அமெரிக்காவில் பிரேசிலில் ஆரம்பித்து, மிக விரைவாக பரவி வரும் தற்கால கிறிஸ்தவ குழும வாழ்வு இயக்கம், மேற்படி சங்கத்தின் கனவை நனவாக்க சங்கத்தின் நோக்கிலே பயணிக்கும் ஒரு இயக்கம் என நாம் துணியலாம். திருச்சங்கம் நேரடியாக இவ்வியக்கம் பற்றி பேசாவிட்டாலும், சங்கத்தின் பின்னான திருச்சபையில் ஆவணங்கள் திருச்சபையின் ஒன்றிப்பு மற்றும் குழுமவாழ்வு பற்றிப் பேசும்போது நேரடியாகவே இவ்வியக்கத்தை விதந்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை ஒரு வழிபடும் சமூகம்

அருட்தந்தை ஜேக்கப் நீக்கிலஸ்

## I. திருவழிபாடும் திருச்சபையும்

வழிபாடு என்பது எமது விசுவாசத்தின் வெளிப்பாடு. நாம் காணக்கூடிய அடையாளங்கள் வழியாக உள்ளத்தில் உறைந்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் ஊடகமாக வழிபாடு திகழ்கின்றது. நாம் இறைவனை வழிபடுவதற்கு அடையாளங்கள் அவசியமானவை. திருச்சபையின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் ஊற்றாக விளங்குவது



அருட்சாதனங்களாகும். அருட்சாதன கொண்டாட்டங்கள் அடையாளங்களால் நிறைந்துள்ளவை. திருச்சபை அருட் சாதனங்கள் மூலமாக இறைவனை சிறந்த முறையிலே வழிபடுவதற்கு இவை பயன்படுகின்றன. திருச்சபையின் உயிருள்ள விசுவாச வாழ்விற்கு ஊட்ட மளிக்கின்ற அருட்சாதனங்களே திருவழிபாட்டின் மையமாக விளங்குகின்றன. திருச்சபையின் எல்லா செயற்பாடுகளுக்கும் ஊற்றாய் இருப்பது திருவழிபாடாகும். 2ம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட திருவழிபாட்டு கொள்கைத்திரட்டில் "திருவழிபாடு திருச்சபையின் செயல்முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது" (எண் 10) எனக் கூறுகின்றது.

## II. அன்பில் இணையும் அன்புச் சமூகம்

தொடக்ககால கிறிஸ்தவ சமூகம் ஒரு வழிபடும் சமூகமாக திகழ்ந்ததை திருத்தூதர்பணி எமக்கு கூறிநிற்கின்றது. "ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள்" பேரு வகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள். ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டே இருந்தார்" (திருத்தூதர்பணி 2:46-47). வாழ்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடும் பின்னிப் பிணைந்து இருப்பதை இந்த கிறிஸ்தவ குழமம் எமக்கு சுட்டிக் காட்டுகின்றது. வழிபாட்டில் எம் வாழ்வையே நாம் இறைவனுக்கு காணிக்கை ஆக்குகின்றோம் என்பதை இச்சமூகம் எமக்கு அறிவுறுத்தி நிற்கின்றது.

## III. அருளடையாளங்களின் நோக்கங்கள்

"அருளடயாளங்கள் கொண்டுள்ள குறிக்கோள்கள் கீழ்வருவன. மக்களை தூய்மையாக்கல், கிறிஸ்துவின் உடலை உருவாக்கி வளர்த்தல், இறுதியாக கடவுளுக்கு வழிபாடு நல்குதல்" (திருவழிபாடு எண் 59). அருட்சாதனங்கள் எம்வாழ்வை புனிதப்படுத்துகின்றன. திருச்சபை என்னும் குழமம் வளர்ச்சியடைகின்றது. ஆகவே அருட்சாதனங்களின் நோக்கங்களை 2ம் வத்திக்கான் சங்கம் தெளிவுற கூறி நிற்கின்றது. அருட்சாதனங்களின் மையமாக விளங்குவது நற்கருணை. எனவே நற்கருணை திருச்சபையை உருவாக்குகின்றது, திருச்சபை நற்கருணையை ஏற்படுத்துகின்றது" என்று புனித அகுஸ்தீனார் கூறுகின்றார்.

## IV. அர்த்தமுள்ள வழிபாடு

திருச்சபையின் வாழ்வில் திருவழிபாடு இன்றியமையாததொன்றாக இருக்கிறது என்றால் இன்று நாம் இதனை எவ்வாறு கொண்டாடுகின்றோம்? எமது அன்றாட வாழ்வு வழிபாட்டோடு இணைந்து இருக்கின்றதா? எவ்வளவுக்கு திருவழிபாடு வாழ்வுக்கு அர்த்தமுள்ளதாய் இதுக்கின்றது, இக்கேள்விகளுக்கு விடை காண்பது இன்று எமது பொறுப்பாகும். 2ம் வத்திக்கான் சங்கம் திருவழிபாட்டிலே பல மாற்றங்களையும் மறுமலர்ச்சியையும் கொண்டு வந்துள்ளது. திருவழிபாட்டை மாற்றியமைக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் எமது வாழ்வை மாற்றியமைக்கும் முயற்சிகள் மந்த நிலையில் உள்ளன. வழிபாடு என்பது வெறும் சடங்குகள் மட்டுமல்ல. சடங்குகளுக்கு அப்பால் நாம் உட்பொருள் உணர்ந்து வழிபாட்டில் அர்த்தமுள்ள முறையில் பங்கு கொள்ள அழைக்கப்படுகின்றோம். எமது கடமையை நிறைவேற்றும் ஒரு நிழ்வாக திருவழிபாடு இருக்கும் என்றால் அது ஒரு பெரும் தவறே. திருவழிபாட்டின் அடையாளங்களைப் புரிந்து தூய நோக்குடன் நாம் பங்கெடுப்பதையே 2ம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது. "திருவழிபாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புக்கேற்ப நம்பிக்கை கொண்டோர் அனைவரும் திருவழிபாட்டு கொண்டாட்டங்களில் முழுமையாகவும் உணர்ந்தும் செயல்முறையிலும் பங்கு கொள்ள அவர்களை இட்டுச் செல்ல வேண்டுமென திருச்சபை அன்னை மிகவும் விரும்புகின்றார்" (திருவழிபாடு எண் 14). திருவழிபாட்டில் நாம் பார்வையாளர்களாக அல்ல பங்காளிகளாக இருப்பதே பொருத்தமானது என்பது இங்கு தெளிவாகின்றது.

## V. வழிபாட்டுக்கும் வாழ்வுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள்

இன்று எமது வழிபாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன? நாம் எவ்வாறு அவற்றில் பங்கெடுக்கிறோம்? என்று சிந்திப்பது இன்றைய தேவையாய் உள்ளது. ஏன் நாம் ஆலயத்திற்கு செல்கின்றோம்? அங்கு நடைபெறுவது என்ன? வழிபாடு முடிந்த பின்பு எம் உள்ளத்தில் உள்ள உணர்வுகள் எவை? இவ்வாறான கேள்விகள் எம்மை சிந்திக்க அழைக்கின்றன.




திரு வழிபாட்டின் நோக்கம் நிறைவேறவில்லை என்றால் திரு வழிபாடு ஓர் அர்த்தமற்ற சடங்காக மாறுகின்றது. கடவுளை மகிமைப் படுத்த வேண்டிய இடத்திலே தம் சொந்த மகிமையைத் தேடி நிற்கின்றவர்கள் பலர், தாம் புனிதம் அடைய வேண்டிய இடத்திலே தம்மிலே சேறு பூசிக் கொள்வோர் பலர். அன்புச் சமூகமாக அயலவரோடு இணைந்து மகிழ்வோடு பங்கு கொள்ள வேண்டிய திருவழிபாட்டில் போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்து காணப்படுகின்றன. சுய திருப்திக்காக பாடல்களைப் பாடுவதும், சுய பெருமைக்காக காணிக்கை கொடுப்பதும் அர்த்தமுள்ள வழிபாடாகாது. இரக்கத்தையும் மன்னிப்பையும் வழங்க வேண்டிய இடத்திலே பகைமையும் வெறுப்புணர்வும் நிறைந்து காணப்படுவது ஏன்? இவைகள் எல்லாம் வாழ்வுக்கும் வழிபாட்டுக்கும் இடையே எழுகின்ற முரண்பாடுகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI. உறவில் வழிபடுவோம்

அயலானை வெறுத்து ஆண்டவனை வழிபடுவது வெளிவேடமாகும். உண்மை வழிபாடு என்பது நாம் பிறரை உள்ளத்திலே அன்பு செய்து மதித்து பகிர்ந்து வாழ்வதாகும். வேறுபாடுகள் இன்றி எல்லோரையும் மதிக்கின்ற ஒரு சமத்துவ உணர்வு எமக்குள் உருவாக வேண்டும். பிரிவினையோடு நாம் இறைவனை வழிபட முடியாது. நாம் எல்லோரும் ஒரே கிறிஸ்துவின் உடலாக உள்ளத்தால் ஒன்று பட்டு அன்பினால் பிணைக்கப்பட்டு அன்புச் சமூகமாக இறை தந்தையை வழிபட வேண்டும். நாம் அயலவரோடு கொண்டிருக்கும் அன்புறவின் அளவிலேயே நாம் இறைவனை அன்பு செய்ய முடியும். வாழ்வின் மையமாக எமது வழிபாடு அமைந்திட எம் பழைய இயல்பை களைந்து புதிய வாழ்வை தொடங்குவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை - சாட்சிய வாழ்வுக் குழுமம்

அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார்

## முன்னுரை

1. யாழ். திருச்சபை தன்னைப் புதுப்பித்து, புதிய தூர நோக்குடன் பயணிக்க முயற்சிக்கும் இவ்வேளையில், மூன்று தளங்களில் வைத்து தனது உண்மை நிலையை ஆய்ந்து புதுப்பிக்க முயல்கின்றது. அவையாவன: திருச்சபை ஒரு அன்பின் குழுமம், வழிபாட்டுக் குழுமம், சாட்சியக்குழுமம், இக்கட்டுரை திருச்சபை ஒரு சாட்சிய வாழ்வு குழுமமென்பது பற்றி அலசுகிறது.

சாட்சிய வாழ்வு என்பது இரு பரிமாணங்கள் (dimentions) கொண்டது. ஒன்று உள்ளூரப்புதுப்பித்தல் (interior renewal), மற்றொன்று சேவையில் வெளிப்படுத்துதல். உள்ளூரப் புதுப்பிக்கப்படாமல், சாட்சிய வாழ்வு ஒருபோதும் நிலைபேறு (sustainable) அடையாது. உள்ளூரப்புதுப்பிக்கப் படாமல் திருச்சபை ஒரு குழுமமாக செய்யும் சேவைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் போல நிலைபேறு அடையாது. கால ஓட்டத்தில் மறைந்துவிடும் அல்லது செயற்திறன் அற்றதாகிவிடும். அருளாளர் அன்னை தெராசா சபையின் சேவைகள் நிலைபேறுயுடையவையாகவும், கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் சேவைகளாகவும் இருப்பதற்கு காரணம் அவர்களின் உள்ளூரப் புதுப்பித்தல் வழி வாழ்வும், அதனூடாக பரிணமிக்கும் மனிதநேய சேவைகளுமாகும். அதாவது வாழ்வு சாட்சியப் பணிபுரிவதற்கு முன்னதாக கிறிஸ்தவர்களினதும், திருச்சபையினதும் வாழ்வு, சாட்சிய வாழ்வில் முதன்மை பெறுகின்றது. அதை தொடர்ந்துதான் பணி வாழ்வு சாட்சியமாக பரிணமிக்கின்றது.



### 1.2 உள்ளூரப் புதுப்பித்தல் (Internal Renewal)

நான் அல்லது நாம் இப்போது இருக்கும் நிலையிலிருந்து சுய கடத்தல் நிலைக்கு செல்லுவதே (self transcendence) உள்ளூரப் புதுப்பித்த லாகும். சுய கடத்தல் நான்கு நிலைகளில் (levels) நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2.1 அறிவு பூர்வமான [நுண்மதி] மனமாற்றம் (Intellectual Conversion)

நாம் பல வகையான முற்சாய்வுகளுடன் (biasor prejudice) வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உதாரணமாக முஸ்லீம்கள் - பயங்கர வாதிகள்; வறுமைக்கு காரணம் ஏழைகளின் சோம்பல். முற்சாய்வுகளின் காரணமாக நாம் உண்மை நிலையைப் பார்க்க தவறி விடுகின்றோம். எனவே அறிவு பூர்வமான மனமாற்றம் இன்றியமையாததாகும்.

### 1.2.2 அறநெறி சார்ந்த மனமாற்றம் (Moral Conversion)

இம் மனமாற்றத்தில் நாம் உணர்வு நிலையிலிருந்து மதிப்பீடுகள் (values) சார்ந்து நோக்குதல் வேண்டும். உதாரணமாக, சிங்கப்பூரின் சிற்பி என அழைக்கப்படும் லீ குவான் ஜீ, சீன மொழியை சிங்கப்பூரின் அரசகரும மொழியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று மக்கள் உணர்வு பூர்வமாக கோரியபோது, சிங்கப்பூரின் பெரும்பான்மையினர் சீனர்களாக இருந்தாலும், ஆங்கிலமே அரச கரும மொழியாகவும், அங்கு பேசப்படும், சீனமொழி, தமிழ், மலாய் மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாகவும் பிரகடனப்படுத்தியதனால் இன்று சிங்கப்பூர் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரிசையில் முன்நிற்கின்றது.

### 1.2.3 உளவியல் மனமாற்றம் (Psychic Converson)

நீண்ட காலப்போர் எம் மத்தியில் பலவேறு விதமான வடுக்களை ஏற்படுத்தியுள்ளது. சிறுபராயத்திலிருந்து, முதிர்வயதுவரை, குடும்பங்களில் சமூகங்களில் ஏற்படும் முரண்பாடுகளின் காரணமாக நாம் பல வடுக்களுடன் வாழுகின்றோம். அவை ஆற்றுப்படுத்தாமலே உறங்கு நிலையில் இருப்பதனால், பாதிக்கப்பட்டவர்களே, மற்றவர்களையும் பாதிக்கும் நிலைக்கு தள்ளுகின்றனர். எனவே எம் வடுக்களை நாம் ஏற்றுக் கொண்டு குணமாக்கப்படல் இன்றியமையாததாகும்.

### 1.2.4 ஆன்மீக மனமாற்றம் (Religious Conversion or Spiritual Conversion)

இம்மனமாற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது எதிர்நோக்கு (hope). இங்கு மனமாற்றம் என்பது இறை அருளோடு ஏற்படுத்தப் படுவதாகும். எதுவித பலனையும் எதிர்பார்க்காமல் எமது கடமைகளை நாம் முழுமையாக செய்தல் வேண்டும். உ+ம் - ஒரு போராளி தன் இனத்திற்காக போராடும் போது, இறுதி இலக்கு அடையும் போதுதான் உயிருடன் இருக்கமாட்டேன் என்று தெரிந்தும் தன்னை அர்ப்பணித்தல். இங்கு அவனின் எதிர்நோக்கு தெளிவாக தென்படுகின்றது. தன் சந்ததியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிக்காக, அமைதியான எதிர்காலத்திற்காக தன்னை எதுவித எதிர்பார்ப்பும் இன்றி அர்ப்பணித்தல்.

மேற்கூறிய நான்கு நிலைகளில் எம்மை நாம் மாற்றவில்லை என்றால் சாட்சிய குழுமமாக, செயற்திறனுள்ள குழுமமாக செயல்பட முடியாது.

## 1.3 இறையன்பை வெளிப்படுத்தும் சேவைகள்:

திருச்சபையின் பணி (mission) கிறிஸ்துவின் பணியாகும். தந்தை மகனை அனுப்பினார், மகன் தம் பணியைத் தொடர்ந்தாற்ற திருச்சபையை ஏற்படுத்துகின்றார். இயேசுவின் பணியில் சமூக அறநெறிகள் (social ethics) இழையோடிக்கொண்டிருப்பதை நாம் தெளிவாக நோக்கலாம். சமூக அறநெறி தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவின் ஒரு பகுதியாகவே நோக்கப்படுகிறது. (Social Ethics was very much part of the new relationship with God the Father). இதை நாம் லூக் 4:16-20 இல் தெளிவாகப் பார்க்கின்றோம். இயேசு தாம் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கை தெளிவாக விளக்குகின்றார். இயேசுவின் பணி அடிப்படையில் நீதியை வேண்டி நிற்கின்றது. அதாவது சமூக, அரசியல், பொருளாதாரப் பண்பாட்டுத் தளங்களில் சரியான உறவு நிலையை (right relationship) வேண்டி நிற்கின்றது.

பழைய ஏற்பாட்டில் பல ஆண்டுகளாக யாவேதான் இஸ்ராயேல் மக்களின் அரசராக இருந்து ஆண்டதனூடாக மக்கள் நீதியாக, நடத்தப்பட்டார்கள். சமத்துவம் பேணப்பட்டது. பழைய ஏற்பாட்டிலேயே சமூக அறநெறிகள் யாவும் இஸ்ரயேலின் அரசராக யாவே இருந்ததனால் பேணப்பட்டது (வி.பி 15:18, நீதி 8:22-23, நீதி 9:7-21, 1சாமு 8:1-22). மேலும் விடுதலைப் பயண நூலினூடாக, யாவே, தம்மை, ஒரு விடுதலை வழங்கும் இறைவனாகவே வெளிப்படுத்துகின்றார். இஸ்ராயேல் மக்களின் வரலாற்றினூடாக செயல்படும் இறைவன், பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு அடிமைத்தனங்களிலிருந்து மக்களை விடுவிக்கின்றார். விடுதலைப் பயணம் 14ம் அதிகாரத்தில் செங்கடலினூடான கடத்தல் எமக்கு யாவே விடுதலையின் கடவுள் என்பதை அடையாளப்படுத்துகின்றது.

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் புதுமைகள், போதனைகள், சமூக அறநெறியை பிரதிபலிக்கின்றது. மத் 25:31-46ல் கூறப்பட்டவை, நீதியின் செயற்பாடுகளாகவே நோக்கப்படுகின்றது. உணவு கொடுத்தல், உடை கொடுத்தல், போன்றவை வெறும் நற்செயல்களாக (acts of charity) பார்க்கப்படவில்லை. அவை நீதியை மறுப்பவையாகவே கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, உடை, நீா் பகிரப்படாமல் இருப்பது, தேவையிருப்பவா்களின் உரிமை மறுப்பு நிகழ்வாக கருதப்பட்டபடியால், அவர்கள் தண்டிக்கப் படுகின்றார்கள். பகிர்ந்தளிக்காமல் இருப்பவர்கள் 'அணையாத நெருப்புக்குள் செல்வார்கள்' (மத் 25:41).

பணக்காரன், லாசர் உவமையிலும் (லூக் 16:19-31), ஏழைகளின் மட்டில் கடவுள் விஷேட கவனம் செலுத்தும் ஒருவராக அடையாளப்படுத்தப்படுகின்றார். பிறா் அன்புப் பணிகளில் ஈடுபடவில்லை யென்றால் அவா்களிடம் கடவுள் அன்பு நிலைத்திருக்காது (1 யோவா 3:17).

மேலும் (யாக் 2:14-17), கிறிஸ்தவ நம்பிக்கை, எப்போதும் செயல் வடிவம் பெறவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. செயல் அனுபவம் பெறாத நம்பிக்கை தன்னிலே உயிரற்றதாகும். ஆபிரகாமைப் போன்று நம்பிக்கையும் செயலும் இணைந்து செயல்படவேண்டும். அதனால் தான் அவா் இறைவனுக்கு ஏற்புடையவரானார்.

## 1.4 திருச்சபையின் சமூக திரு மடல்கள் (Social Doctrines of the Church)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சி சமூகத்தில் பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. மனிதன் அடிமையைப் போல சுரண்டப்பட்டு மனித மாண்பு, மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், உலக திருச்சபை பல சமூக மடல்களை வெளியிட்டது. முதலாவது சமூகத் திருமடல் தொழிலாளா் சாசனமாகும். அதில் தெளிவாக இல 03ல், பொருளாதார, அரசியல் விடயங்களில் திருச்சபை குரல் கொடுப்பது, உரிமையும் கடமையும் என கூறியுள்ளது.

'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் இல. 27-29 எல்லா மனிதர்களும் இறைசாயலோடு படைக்கப்பட்டதனால் மனித மாண்பு உண்டு. எனவே அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி மதிக்கப்படல் வேண்டும். மனித மாண்பை பேணிக் காப்பது திருச்சபையின் கடமை என்று கூறுகின்றது.

'அவனியில் அமைதி' என்னும் சமூகத் திருமடல், மனித உரிமைகள் பற்றிய தெளிவான பார்வையைத் தருகின்றது. இல. 146-150 கிறிஸ்தவா்கள் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். கிறிஸ்தவ விழுமியங்களையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்டு மனிதகுல மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ல் வெளியிடப்பட்ட ஆயர்மன்ற மடல் 'உலகில் நீதி' இல 6ல் நீதிக்காக உழைப்பது, அமைதிக்காக, அபிவிருத்திக்காக உழைப்பது, உலகை மாற்றியமைப்பது (transformation) என்பவை மறைப்பரப்புப் பணியுடன் பின்னிப்பிணைந்த செயற்பாடு (it is an intergral part of evangelization) என்று மறைபரப்பு கொள்கையில் ஒரு புதிய பார்வையை எமக்கு தருகின்றது.

எனவே மேற்கூறியவற்றிலிருந்து திருச்சபை பணிபுரியும் திருச்சபையாக செயல்படவில்லையெனில் புனித யாகப்பர் கூறியது போல் உயிரற்ற திருச்சபையாக இறைவனுக்கு ஏற்புடையதற்ற திருச்சபையாக அமையும். பணிபுரியும் திருச்சபையாக செயல்பட வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இருக்கும் இன்றை யாழ் திருச்சபை எந்த தளங்களில் தன் பணியை முன்னிலைப்படுத்தல் வேண்டும்? எனவே இன்றைய எம் சூழமைவை சற்று அலசிப்பார்த்தல் இன்றியமையாததாகும்.

## 1.5 யாழ் சமூகத்தின் இன்றைய நிலை:

நாம் இன்று வாழும் சூழல் ஆயுதப் போர்முடிவுற்ற, ஆனால் முரண்பாடுகள் (conflict) முடிவுறாத, போரின் வடுக்களைச் சுமக்கின்ற ஒரு சமூகத்தளத்தில் நிற்கின்றோம்.

போருக்கு பின்னரான சூழலை பகுப்பாய்வு செய்ய அமெரிக்க சமூக உளவியளாளர் ஆர்சன் எலிஸ்ற் (Aranson Eliot) என்பவரின் சமூக இன்மைப்படுத்தல் கோட்பாட்டை (theory of social deprivation) பயன்படுத்தி பகுப்பாய்வு செய்வோம். சமூக இன்மைப்படுத்தல் என்பது சமூகப்புலங்களில் நிகழ்ந்த போரினால் உருவாக்கப்பட்ட சமூகப் பொருண்மியங்களாகும். (social phenomenon)

சமூக இன்மைப்படுத்தலினால் ஏற்படும் தாக்கத்தினை இரு தளங்களில் நோக்கலாம்.

1. உள சமூகத் தாக்கங்கள் (psyco- social impacts)
   (அ) உளரீதியான பிரச்சனைகள் (psyco based problems)
   (ஆ) சமூகரீதியான பிரச்சனைகள் (social based problems)
2. சமூக பண்பாட்டு தாக்கங்கள் (socio cultural impact)
   (அ) எதிர்மறை சமூக இயக்கம் (negative social impact)
   (ஆ) எதிர் மறை குடும்ப இயக்கம் (negative family dynamic)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.5.1 உள சமூக தாக்கம்

போரின் விளைவு, தாக்கம் ஆழமாகவும், காத்திரமாகவும் அமைகின்றது. ஒரு வகை உளப்பிறழ்வுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். ஊசம், ஏக்கம், பதகழிப்பு, மனஅழுத்தம், உளமந்த நிலை (mental retardation) போரின் சூழலில் சமூகமயமாக்கப்படும் இளைஞன் ஒருவகை வக்கிர உணர்வுடன் காணப்படுவான். எனவே இவர்களின் செயல்பாட்டில் ஒரு எதிர்ப்புணர்வு காணப்படும். போர் முடிவுற்றாலும் எதிர்கால சந்ததியினர் ஒரு வகை சமூக நோய்வாய்ப்பட்டவர்களாக (psyco sociopathy) மாறிவரும் சமூகபோக்கு காணப்படுகின்றது.

மேலும் போரின் சமூக உளவியலை புரிந்து கொள்ள ஆளிடைக் கவர்ச்சிக் கோட்பாடு (theory of inter-personal attraction or gain – loss theory) உதவியாகவுள்ளது. அதாவது ஒருவருடன் நெருங்கிப் பழகி வந்தாலும் வேறொருவர் இடையில் வந்து, உங்களை புகழ்ந்து பாடி வெகுமதிகளை அளிக்கும் போது புதியவரின் முக்கியத்துவம் வலுப்பெறுகின்றது. எனவேதான் இன்று எம் சமூகத்தில் பந்தம் பிடித்தல், பணத்திற்காக பதவிக்காக எதையும் செய்தல் போன்றவை நடத்தைக் கோலங்களாக மாறியுள்ளன. போர்ச்சூழலில் தப்பிப் பிழைக்கும், முகமூடி அணிந்த வாழ்க்கைக்கு நிபந்திக்கப்பட்டவர்கட்கு, போர் முடிந்த சூழலிலும் பந்தம் பிடித்தல், பணத்திற்காக, பதவிக்காக எதையும் செய்தல் ஒரு பண்பாடாகிவிட்டது. இந் நிலையில், கடும் உழைப்பு, நேர்மையான வாழ்வு, முயற்சியாண்மை (enterpreneurship) போன்ற விழுமியங்கள் சமூகத்தில் மருகிவிட்டன. இவற்றை மீள் கொணர்வது திருச்சபையின் கடப்பாடாகும்.

### 1.5.2 சமூக ரீதியான பிரச்சனைகள்.

பல சமூக ரீதியான பிரச்சனைகள் இனம் காணப்பட்டுள்ளன. பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஆண் ஆதிக்க சமூக அமைப்பிற்கு சமூகமயமாக்கப்பட்ட குழுமம், பெண் தலைமைத்துவத்தை ஏற்கும் நிலையானது பல சவால்களை எதிர் நோக்குகின்றது. அதிகரித்த விவாகரத்துக்கள், ஒரு வகையான குடும்ப ஒருங்கமைவின்மையாகும்.

மேலும் திருமணம் செய்யாத தாய்மாரின் (unwed mothers) எண்ணிக்கை அதிகரிப்பு, வறுமை, ஏமாற்றுதல் இந்நிலைக்கு முக்கிய காரணமாகின்றது. கருக்கலைப்பு எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். திருமணம் செய்யாத முதிர்கன்னிகையின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மேலும் தற்கொலை, தற்கொலை முயற்சி அதிகரிப்பிற்கு, விரக்தி, இழப்புக்கள், சமூக ஒழுங்கமைவின்மை அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

எமில் டுர்காயிம் என்னும் சமூகவியலாளர் கூறுகின்றார், சமூக பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக பொருளாதார மந்தம், அநோமி (நியமம் அற்ற நிலை normlessness) தற்கொலை அதிகரிப்பிற்கு காரணமென்கின்றார்.

இளைஞர்களின் உப பண்பாடாது (subculture) ஒரு விலகல் பண்பாடாகவுள்ளது (deviance). மது அருந்துதல், போதைவஸ்து பாவனை, குழு வன்முறை இவை ஒரு வகை எதிர்பண்பாடாக கருதப்படுகின்றன. மேலும் உலகமயக்கலின் விளைவாக இளைஞர் மத்தியில் செல்வாக்கு செலுத்தும் வீடியோ கலாச்சாரம், இணைய காட்சியறைக் கலாச்சாரம் (internet cafe culture) அதிகரிக்கும் போக்கு காணப்படுகின்றன.

ஊனமுற்றவர், அநாதைகளாக்கப்பட்டவர்களின் அதிகரிப்பினால் சமூகத்தில் தங்கியிருப்பவர்கள் (dependency) நிலை ஒரு சமூக சுமையாக அமைகின்றது. புலம்பெயர் பண வரவிற்காக காத்திருத்தலும் தங்கியிருக்கும் கலாச்சாரத்தின் ஒரு கூறாகும். தங்கியிருக்கும் கலாச்சார மானது சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சிக்கு ஒரு தடைக்கல்.

போருக்கு பின்னரான இந்நிலை முயற்சியாண்மை, சவால்கட்டு அல்லது ஆபத்திற்கு (risk) முகம் கொடுக்க தயங்குதல், பொருளாதார, சமூக, முதலீடு போன்ற அபிவிருத்தி விவகாரங்களைப் பெரிதும் பாதிக்கும். மேற்கூறியவைகளை விட மக்கள் முகம் கொடுக்கும் சமூக அரசியல் பிரச்சனைகளும் உள்ளன.

## 1.6 சமூக அரசியல் பிரச்சனைகள்

அ) மீள் கையளிப்படாத உயர் பாதுகாப்பு வலைய காணிப் பிரச்சனைகளும், மக்களின் தொடர் அகதி, இடம் பெயர் வாழ்வும் அதனால் ஏற்படும் பிரச்சனைகள்.

ஆ) காணாமல் போனோரின் பிரச்சனைகளும் உறவுகளின் தொடர் தேடலும், உளத்தாக்கங்கள்.

இ) விசாரணையின்றி சிறையில் வாடும் கைதிகளின் நிலையும் அதனால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களின் நிலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) இனங்கட்கிடையேயான மீளிணக்கப்பாடு.

உ) இந்திய, தென்னிலங்கை மீனவர்களின் வடகடல் ஆக்கிரமிப்பு, வாழ்வாதார, இழப்புக்களும், மீனவ சமூகங்களின் வறுமைப் பிரச்சனைகள்.

இவர்கள் மட்டில் யாழ் திருச்சபை மொனமாக இருக்க முடியாது. குரலற்றவர்களின் குரலாக இருக்க திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது. வத்திக்கான் சங்கம் இ.தி.இல 1ல் கூறப்பட்டுள்ளது போல், மனித குலத்தின் மகிழ்வும் நம்பிக்கையும், ஏக்கமும் கவலையும் கிறிஸ்துவைப் பின்பற்று வோரின் இதயங்களில் எதிரொலிக்க வேண்டும். மனிதனின் மகிழ்வும், நம்பிக்கையும், ஏக்கமும், கவலையும், கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்க்கும் முற்றிலும் உரியதே. திருச்சபையின் குறிக்கோள் (இ.தி.இல.3) ஆவியானவா் காட்டும் வழியில் உண்மைக்கு சாட்சியம் கூறவும், (யோவான் 18:27) பணிவிடை புரியவுமே (மாற் 10:45). உலகிற்கு வந்த கிறிஸ்துவின் வேலையைத் தொடர்ந்து நடத்துவதே அக்குறிக்கோள்.

**உசாத்துணை நூல்கள்:**



1. தொழிலாளர் சாசனம் - திருச்சபையின் சமூக திருமடல்.
2. இன்றைய உலகில் திருச்சபை - Vat II document.
3. அவனியில் அமைதி – திருச்சபையின் சமூகத் திருமடல்
4. உலக நீதி – 1971 ஆயர் மன்ற மடல்.
5. Aranson Eliot (1960), The social animal, freeman & co, San Franaisco.
6. Jerome G.Manis (1974), Modern social problems, Saje Publications.
7. Sarvananthan. M, 'Economic Freedom' The path to economic & Political resargence of the conflict region, Ground View, Vol.3, No4, Aug 2009.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை காலத்துக்கு காலம் தன்னைப் புதுப்பிக்கின்றது: இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இறையியல் சிந்தனையில் திருவருட்சாதனங்கள்

அருட்தந்தை இ.அ.ஜெராட் டீ ரொசய்ரோ அ.ம.தி



இரண்டாம் வத்திக்கான் சங்கம் காலத்தின் குறிகளை நற்செய்தியின் ஒளியில் ஆய்ந்து, திருச்சபையின் உள்ளக வாழ்விலும், அதன் உலகோடு உறவு வாழ்விலும் புதுப்பித்தலை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாகப் பல இறையியல் படிப்பினைகளை முன் வைத்துள்ளது. சிறப்பாக, கிறிஸ்தவ திருவழிபாட்டிலும், திருவருட்சாதனங்கள் பற்றிய இறையியல் சிந்தனையிலும் சங்கம் ஏற்படுத்திய மாற்றம் மிக முக்கியமானதும் அடிப்படையானதுமாகும். இக்கட்டுரையில் திருவருட்சாதனங்கள் பற்றிய சங்கத்தின் படிப்பினைகள் காலத்துக்கு காலம் தன்னைப் புதுப்பிக்கும் திருச்சபையின் முயற்சியில் எப்படி தூண்டுதலாகின்றது என்பதை காணலாம்.

## சங்கத்திற்கு முற்பட்ட கால இறையியல் சிந்தனை

சங்கத்திற்கு முற்பட்ட காலங்களில் திருவருட்சாதனங்கள் அருளடையாளங்களாகவும், இறையருளைப் பெறும் சாதனங்கள், அல்லது வழிகளாகவும் அறியப்பட்டன. அவை திருநிலைப்படுத்தப்பட்டவர்களால் விசுவாசிகளுக்கு அளிக்கப்படுபவையாக ஏற்கப்பட்டன. ஒவ்வொரு திருவருட்சாதனமும் தனித்துவமான இறையருளைக் கொண்டுள்ளதாகவும், திருச்சபை இயேசுவின் பாஸ்கா மறைபொருளில் பங்குகொள்வதால் அவை திருச்சபையின் திருவருட்சாதனங்களாவும் ஏற்கப்பட்டன. இரண்டாம் லியோன் சங்கத்திலும் (1274), புளோரன்ஸ் சங்கத்திலும், திருத்தெந்தீன் சங்கத்திலும் (1547) திருவருட்சாதனங்கள் ஏழு என உறுதி செய்யப் பட்டதுடன், திருவருட்சாதனம் என்ற சொல் வேறு எதனையும் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை. இதனைத் தழுவியே 1917ல் வெளியிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் சட்டத் தொகுப்பில் திருவருட்சாதனங்கள் 'de rebus' பண்டங்கள் அல்லது நுகர்வுப் பொருள்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

**சங்கத்தின் இறையியல் சிந்தனை**

இப்பாரம்பரிய இறையியல் சிந்தனைக்கு மாற்றாக, இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருவருட்சாதனங்களை 'இறைமக்கள் சமூகத்தின் திருவழிபாட்டு நிகழ்வுகள்' (Liturgical Acts of the Church gathered in assembly) என்ற இறையியல் சிந்தனையை முன்வைத்துள்ளது. 'திருவழிபாடு' பற்றிய கொள்கை விளக்கத்திலே திருவருட்சாதனங்கள் பற்றிய சங்கத்தின் படிப்பினைகள் இப்புதிய இறையியல் சிந்தனைக்கு வழிகாட்டுகின்றன. திருவருட்சாதனங்கள் திருச்சபையின் அருட்சாதனங்கள் என்ற புரிந்துணர்வுடன், "கிறிஸ்துவின் மறைபொருளையும், உண்மைத் திருச்சபையின் சரியான இயல்பையும் தம் வாழ்வின் வழியாகக் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்த இந்தத் திருவழிபாடு மிகச்சிறந்த முறையில் பயன்படுகிறது" (திவ. 2) என சங்கம் குறிப்படுகின்றது. இங்கே திருவருட்சாதனங்களை கிறிஸ்தவ வாழ்வின் சிகரமான 'திருவழிபாட்டோடு' தொடர்புபடுத்தி சங்கம் தனது படிப்பினையை முன்வைத்துள்ளது. மேலும், முக்கியமாக இறைமக்கள் சமூகமான திருச்சபையை "கிறிஸ்துவில் இத்திருச்சபை ஓர் அடையாளம் போல் விளங்குகிறது" (தி.1) என 'திருச்சபை' என்ற கோட்பாட்டு விளக்கத்தில் சங்கம் குறிப்பிடுவது திருவருட்சாதனங்கள் பற்றிய சங்கத்தின் இறையியல் படிப்பினைக்கு மிகவும் அடிப்படையாக அமைகின்றது. திருத்தி அமைக்கப்பட்ட திருச்சபையின் சட்டக் கோவையிலும் திருவருட்சாதனங்கள் இப்புதிய விளக்கத்தைப் (Office of Sanctifying in the Church) பெறுகின்றன.

**கிறிஸ்துவில் திருச்சபை ஓர் அருட்சாதனம்**

'திருச்சபை' என்ற கோட்பாட்டில் சங்கம் திருச்சபை கிறிஸ்துவில் ஓர் அடையாளம் எனக் கூறுவதன் மூலம் திருச்சபைக்கும் இயேசுக் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவை வலியுறுத்துகிறது. இயேசுக்கிறிஸ்து வரலாற்றில் வெளிப்படையாக தந்தை இறைவனின் அருட்சாதனமாகியது போல, திருச்சபையும் வரலாற்றில் இயேசுவின் அருட்சாதனமாகிட அழைக்கப்பட்டுள்ளது (திவ.5). 'திருச்சபை கிறிஸ்துவில் ஓர் அருட்சாதனம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் மூலம் திருச்சபையின் இயல்பையும் அதன் மறைபணிப் பாங்கையும் உறுதிப்படுத்துகிறது. சிறப்பாக, திருவழிபாட்டு நிகழ்வுகளான பாரம்பரிய ஏழு அருட்சானங்கள் வழியாகவும் திருச்சபை தனது மறைபணியை நிறைவேற்றுகின்றது. திருச்சபை தனது இயல்பான 'கிறிஸ்துவில் அருட்சாதனத் தன்மையை' திருவழிபாட்டு நிகழ்வுகளான பாரம்பரிய ஏழு அருட்சானங்கள் வழியாக வெளிப்படுத்துகின்றது. திருச்சபையின் அருட்சாதனத் தன்மையை வெளிப்படுத்துவதால் அவை திருச்சபையின் அருட்சாதனங்களாகின்றன. அவை விசுவாசிகளில் புதுப்பித்தலையும், திடப்படுத்தலையும் ஏற்படுத்துகின்றன. அவை ஒப்புரவையும், புனிதத்தன்மையையும், சாட்சித்தன்மையையும் கிறிஸ்தவர்கள் வாழ்வதற்கு தூண்டுதலாகின்றன, ஆற்றலாகின்றன (திவ 7).

## அருட்சாதனங்கள் திருவழிபாட்டு நிகழ்வுகள்

பாரம்பரிய ஏழு அருட்சாதனங்களான 'இறைமக்கள் சமூகத்தின் திருவழிபாட்டு நிகழ்வுகளை' கிறிஸ்தவ விசுவாசிகள் ஒரு சமூகமாக ஒன்று கூடி நிறைவேற்றுவதற்கு அழைக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவ விசுவாசிகளின் ஈடுபாடுள்ள பங்களிப்பு இந்நிகழ்வுகளில் அவசியமாகின்றது. கிறிஸ்தவ விசுவாசிகளின் பங்களிப்பானது இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா மறைநிகழ்வில் அவர்கள் கொள்ள வேண்டிய பங்கிற்கு வெளி அடையாளமாகின்றது. கிறிஸ்துவின் பாஸ்கா மறைநிகழ்வானது அவரது இறையாட்சிக்கான வாழ்வு, செயல்பாடுகள், படிப்பினைகள், பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இம்மறைநிகழ்வு வரலாற்றில் மக்கள் மத்தியில் இறையாட்சி ஒன்றையே நாடித் தேடுவதற்கு தூண்டுதலளித்தது; இறை அன்பையும், பரிவையும் சுவைக்கச் செய்தது; உடல்-உள நலம்பெறச் செய்தது; ஒப்புரவை வாழச்செய்தது; பணி மனத்தை வளர்க்க வழிகாட்டியது; இறையன்பில் வாழ்வை அர்ப்பணிக்க துணிவூட்டியது. புனித பவுல் இம்மறை நிகழ்வை "கடவுள் தன்மையில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை எற்று மனிதருக்கு ஒப்பானார்..." (பிலி. 2:6-8) என இரத்தினச்சுருக்கமாக அறிக்கையிடுகிறார். ஆக, திருச்சபை இறைமக்கள் சமூகமாக அருட்சாதனங்களான திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டு கிறிஸ்துவின் இம்மறைநிகழ்வைச் சுவைக்கவும், வாழவும், சாட்சியம் பகரவும் அழைக்கப்படுகிறார்கள். இதன் வழியாக திருச்சபையாம் இறைமக்கள் சமூகம் 'கிறிஸ்துவில் ஓர் அருளடையாளமாகின்றது'. திருச்சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சாதனத்தன்மை இறைமக்கள் சமூகத்தால், சமூகத்தில் அதன் வாழ்வால் வெளிப்படுத்தப்பட வேண்டியதாகும்.

**கிறிஸ்தவர்களின் அருட்சாதன வாழ்வு**

அருட்சானங்கள் பற்றிய சங்கத்தின் இறையியல் சிந்தனையில், அருட்சாதனங்கள் வெற்றுச் சடங்குகள் அல்ல, மாறாக அவை கிறிஸ்தவ விசுவாசிகளின் வாழ்வில் மாற்றத்தையும், புதுப்பித்தலையும் ஏற்படுத்துபவை என்பது இழையோடிக்கிடக்கின்றது. அருட்சாதன நிகழ்வுகள் கிறிஸ்தவர்களின் விசுவாசப் பயணத்துடன் பின்னிப் பிணைந்தவையாகும். அவை கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஏற்பட வேண்டிய தொடர் மாற்றத்துக்கு ஆற்றலும், தூண்டுதலும் அளிக்கின்றன. அருட்சாதன நிகழ்வுகள் வழியாக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில்,




கிறிஸ்துவுடன், கிறிஸ்து வழியான வாழ்வை அறிக்கையிடுகிறார்கள். தாம் அறிக்கையிட்ட இவ்வாழ்வுக்கு புனித பவுலின் படிப்பினையில் "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களில் (கிறிஸ்தவர்களில்) இருக்கட்டும்" (பிலி.2:5) என்பது அடிப்படையாகின்றது. ஆக, திருவருட்சாதன நிகழ்வுகளில் பங்கு கொள்வது ஒரு உருவாக் கத்திற்கான சவாலாகின்றது.

இறை அன்பின், இறை அருளின் முழுமையான வெளிப்பாடாய் இயேசு கிறிஸ்து இருப்பதால், அவரது வாழ்வு, கிறிஸ்தவர்களின் வாழ்வில், வாழ்வால் வெளிப்படையான அடையாளமாக வேண்டும். அதுவே திருச்சபையின் அருட்சாதனத்தன்மையை அடையாளப்படுத்தும் வழியாகும்.

**முற்றுக் கூற்றுக்கள்**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் வரலாற்றுப் பயணத்தில் மிக முக்கிய நிகழ்வாகும். காலத்தின் குறி அறிந்து திருச்சபையின் காலத்துக்கு ஏற்ற மாற்றத்துக்கு சங்கம் வித்திட்டுள்ளது. சங்கத்தின் இறையியல் கருத்தாக்கம் திருச்சபையின் அக, புற வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்துக்கு அடிப்படையாகும். கிறிஸ்தவ வாழ்வுக்கு மிக அடிப்படையான திருவருட்சானங்கள் பற்றிய சங்கத்தின் இறையியல் அடிப்படைகள் இதற்கு ஒரு சான்றாகும்.

இறைமக்கள் சமூகமாகிய திருச்சபை கிறிஸ்துவில் ஓர் அருளடையாளம். ஆகவே இறைமக்கள் சமூகமாக அருட்சாதன நிகழ்வுகளில் பங்கு கொண்டு திருச்சபையின் அருட்சானத்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவில் வாழ்வை வாழ்ந்து அறிக்கையிடுவதற்கு தமக்கு தேவையான புதுப்பித்தலையும், திடப்படுத்தலையும் பெறுகின்றார்கள் (திவ.2). திருச்சபையின் திருவருட்சாதனங்கள் இறை அருளை வெளிப்படுத்தும் வழிகள் மட்டுமல்ல. அவை திருச்சபையின் அருட்சாதன வாழ்வின் வளர்ச்சிக்கும், உருவாக்கத்துக்கும், உறுதிப்படுத்தலுக்கும் அடிப்படை யானவையாகும். சங்கம் நாடும் திருச்சபையின் அக, புற வாழ்வு மாற்றம் கைகூடுவதற்கு சங்கத்தின் இறையியற் கருத்தாக்கத்தின் அடிப்படையில் தொடர் இறையியல் சிந்தனை வளர வேண்டிய தேவையுண்டு.

**துணை நின்ற நூல்கள்**


* ஆரோக்கியராஜ், திருவழிபாடு ஓர் அறிமுகம், தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம், 1995.
* வலண்டின் ஜோசப், அடையாளங்கள் அர்த்தங்கள் அனுபவங்கள், நல்லாயன் பதிப்பகம், சென்னை, 2004.
* Errol D'Lima, Thomas Paul Urumpackal, Sacraments in General, Theological Pub. In India, Bangalore, 2005.
* Peter E. Fink, "The Church as Sacrament and sacramental life of the Church", Vatican II, The Unfinished Agenda, Lucian Richard, others, Eds., Paulist press, New York, 1987, 69-81.
* Kevin Irwin, "Sacraments", The New Dictionary of Theology, Joseph A. Komonchak, others, Eds., Gill and macmillan Dublin, 1990, 910-922.
* "The Celebration of the Christian Mystery", Catechism of The Catholic Church, Geoffrey Chapman, London, 1994, 247-276.
* "The Seven Sacraments of the Church" Catechism of The Catholic Church, Geoffrey Chapman, London, 1994, 277-371.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித 23ம் யோவான் திருத்தந்தை

அருட்சகோதரன் கு.கிருஷாந்த்

அன்று ஐப்பசி மாதம் 20ம் நாள் 1958ம் ஆண்டு புதிய திருத்தந்தை அங்கே கூடியிருந்த கருதினால்மார்களால் தெரிவு செய்யப்படுகிறார். கருதினால் ஆஞ்சலோ றொங்கல்லி (Angelo Roncalli) புதிய திருத்தந்தையாகிறார். அவரின் வயது (76) மற்றும் அவரைப்பற்றி பலராலும் அறியப்படாத காரணத்தால் 'இடைக்காலத் திருத்தந்தை' என குறைத்து எடை போடப்பட்ட இம் மனிதர் திருச்சபை வரலாற்றையே புரட்டிப் போடப் போகின்ற ஒரு புதிய அத்தியாயத்துக்குள் திருச்சபையை வழிநடத்தத் தயாராகின்றார். இயேசுவின் அன்புச் சீடராம் யோவானின் பெயரைத் தனது திருப்பணிக்கான பெயராகத்தெரிந்தெடுக்கின்றார். இவ்வாறு அவர் தெரிந்ததற்கு இன்னுமொரு காரணமும் கூறப்படுகின்றது. இவருக்கு முன்பு யோவான் என்னும் பெயரில் பணிபுரிந்த திருத்தந்தையர் பலர் சிறிது காலங்களே பணிபுரிந்துள்ளனர் என்பதே அக்காரணமாகும்.



ஆஞ்சலோ யுசெப்பே றொங்கல்லி 1881ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 25ம் நாள் பேர்காமோ (Bergamo) என்கின்ற இடத்தில் பதின்முன்று பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்தார். தன் நகரிலேயே ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டு ஒரு குருவானவரின் உதவியோடு மேலும் கற்றார். பன்னிரண்டு வயதில் குருமடத்தினுள் நுளைந்த இவர் புலமைப் பரிசில் ஒன்றின் உதவியோடு உரோமை நகர் சென்று உயர் மேற்படிப்பை மேற்கொண்டார். குருமடத்தில் கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் சில காலம் இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். 1904ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் கல்விப்பணி, குருக்களை உருவாக்குகின்ற பணி மற்றும் இராணுவத்திற்குரிய ஆன்மீகப்பணி என்பவற்றை திறம்பட ஆற்றியுள்ளார். சில ஆய்வறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார்.

1921ம் ஆண்டு உரோமைக்குத் திரும்பி நற்செய்தி பரப்பும் குழுமத்தை மீள்ஒழுங்கு செய்யப் பணிக்கப்படுகிறார். 1925ல் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டு துருக்கி மற்றும் கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பீடத்தின் பதிலாளாகிறார். இந்தக் காலப் பகுதியில் இஸ்தான்புல் நகரில் ஒரு அலுவலகம் அமைத்து யுத்தக்கைதிகளை ஆதரித்தார். 1944ம் ஆண்டு பாரிஸ் நகரிற்கு திருப்பிடத்தின் தூதுவராகிறார். இவரே UNESCO வில் திரு ஆட்சிப்பீடம் சார்பில் நிரந்தர அவதானிப்பாளராக முதல் நியமனம் பெற்றவராவார். 1953ல் வெனிஸ் நகரிற்கு மூதாதை கருதினாலாக நியமிக்கப்படுகிறார். தன் இறுதி நாட்களை அங்கே மேய்ப்புப் பணியில் செலவழிப்பார் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட வேளையில் 1958ல் புதிய திருத்தந்தையைத் தெரிவதற்கான அமர்வில் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார். அங்கே அவரே திருத்தந்தையாக தெரிவு செய்யப் படுகிறார்.




தனது முதலாவது பொது உரையிலே உலக அமைதிக்கான தனது கரிசனையையும் பிரிந்து போன கிறீஸ்தவர்கள் ஒன்றிக்க வேண்டும் என்ற தனது அவாவையும் வெளிப்படுத்தினார். திருத்தந்தையாகி மூன்று மாதங்களுக்குள்ளாகவே உரோமை மறைவட்டத்திற்கான மாநாடு ஒன்றை நடத்தவும் முழுத் திருச்சபைக்குமான ஓர் சங்கத்தைக் கூட்டவும் திருச்சபைச்சட்டக்கோவையில் திருத்தம் செய்யவும் தீர்மானித்து அறிவிப்பினை விடுத்தார். அதன்படி 1960ல் வரலாற்றில் முதலாவது உரோமை மறைவட்ட மாநாடும் 1962ல் இரண்டாம் வத்திக்கான் சங்கமும் கூட்டப்பட்டன. அத்துடன் சட்டக்கோவையில் திருத்தங்கள் செய்ய ஆணைக்குழு ஒன்றை 1963ல் நியமித்தார். 'அன்னையும் ஆசிரியையும்' (Mater et Magistra) 'அவனியில் அமைதி' (Pacem in Terris) போன்ற அவர் வெளியிட்ட சுற்றுமடல்கள் மிகப்பிரபலம் பெற்ற படிப்பினைகளைக் கொண்டிருந்தன. 1961ல் புதுடில்லியில் இடம்பெற்ற உலகத் திருச்சபைகளின் சங்கத்திற்கு கத்தோலிக்கத் திருச்சபையின் முதலாவது பிரதிநிதியை அனுப்பினார். நல்ல திருத்தந்தை என எல்லோராலும் அன்பு செய்யப்பட்ட திருத்தந்தை 1963 ஜீன் 3ம் திகதி காலமான போது ஒரு பத்திரிக்கை இவ்வாறு செய்தி வெளியிட்டது 'எம் குடும்பத்தில் ஓர் பேரிழப்பு' என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப்புனிதர் நிலைக்கு உயர்த்தும் முயற்சி ஆறாம் பவுல் திருத்தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு புரட்டாதி 3ம் நாள் அருளாளர் நிலைக்கு 2ம் யோவான் பவுல் திருத்தந்தையால் (இப்போது புனிதர்) உயர்த்தப்பட்டார். இறுதியாக 2014ம் ஆண்டு சித்திரை 27ம் நாள் அதாவது இறை இரக்கத்தின் ஞாயிறு அன்று திருத்தந்தை பிரான்சிஸ்குவால் புனிதராக உயர்த்தப்பட்டார். அவருடைய திருநாள் ஆனி மாதம் 3ம் திகதி அல்ல (அவரின் இறப்பு நாள்) மாறாக ஐப்பசி 11ம் நாள் (இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடக்கப்பட்ட நாள்) ஆகும். இவர் கனடாவின் அங்கிலிக்கன் திருச்சபையிலும் (Anglican Church of Canada) அமெரிக்காவின் இவாஞ்சலிக்கல் லூத்தரன் திருச்சபையிலும் (Evangelical Lutheran Church of America) ஜூன் 4ம் திகதி நினைவு கூரப்படுகின்றார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதா நீ மாற மாட்டாயா?
### (மனிதனைப் பற்றிய ஓர் குரங்கின் கவலை)

அருட்சகோதரன் றோ.மேரி பஸ்ரியன்



விஞ்ஞான விருட்சத்திலே
வேகமாய் தாவி
வினைத்திறன் படைத்தவனாய்
விண்வெளி சென்ற மனிதன்
இயந்திரத்தை உருவாக்கி
வேலைதனை இலேசாக்கி
உலகம் முழுவதையும் - ஓர்
ஊராக்கிய மனிதன்

எமிலிருந்து வந்ததையெண்ணி
ஈடில்லா மகிழ்வெனக்கு

இருப்பினும் எமிலிருந்து வந்த இவன்
எங்கிருந்தோ கற்றுவிட்டான்
எமிலில்லா பழக்கமதை

சச்சரவு ஏதுமின்றி
சாகும்வரை சந்தோஷமாய்
ஐந்தறிவு படைத்த யாம்
ஒற்றுமையாய் வாழ்க்கையிலே....



சாதி மத வெறி பிடித்து
சந்தோஷம் தனை இழந்து
பண ஆசை அதிகரித்து – நல்
பண்புகள் தனை மறந்து
குடி போதைதனில் மூழ்கி
குடும்பமதை சீர்குலைத்து
களவாய் கஞ்சா கடத்தி
கைதியாகிறான் கடைசியிலே
இவை ஒன்றும்
இல்லை எம்மிடையே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கம் என்றெண்ணி
அகற்றினான் வாலினை
அதைவிட அசிங்கம் - இப்போ
இவன் செய் - வினை

மரங்களின் மேலிருந்து
மனிதனை பார்க்கையிலே
மண்டை வெடித்து
மனமுடைந்து போகிறோம்....

கள்ளம் கபடமற்று
ஒருவனுக்கு ஒருத்தி என்று
ஐந்தறிவு படைத்த யாம்
இன்பமுடன் வாழ்கையிலே....

வீட்டில் மனைவியிருக்க
விபசார விடுதி செல்லும் கணவனும்,
கணவன் வேலை செல்ல
களவாய் மனைவி கொள்ளும் உறவுகளும்,
பலர் இழுத்து சென்று
பற்றைக்குள் செய்த வன்முறைக்ளும்
பெற்ற பிள்ளையுடன் கொள்ளும்
பாலியல் உறவுகளும்
யாம் அவதானித்த – சில
அசிங்கங்கள்
எம்மிடையே - இல்லை
இவையொன்றும்



பிரிவினைகள் இன்றி
பிறரோடு ஒன்றி
ஐந்தறிவு படைத்த யாம்
அமைதியுடன் வாழ்கையிலே.....
அபகரித்த அடுத்தவன் காணிக்காய்
அடிக்கடி போடும் சண்டைகளும்
அண்டை வீட்டார் அவலங்களை
ஏறெடுத்து பார்க்கா மனங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கைத்தொழில் செய்து
சீவியம் போக்கும் ஏழைகளின்
சீவியத்தை சிந்திக்காது
சீதனம் கேட்கும் மனிதர்களும்

யாம் கண்ட காட்சிகளே...
யார் செய்த குற்றமோ?
எங்கிருந்து கற்றாரோ?
எம்மிடையே இவையில்லை....

பள்ளி யாம் செல்லவில்லை
பட்டமேதும் பெறவில்லை
பண்புடனே நாம் பழகி
பகிர்ந்து தினம் வாழ்கையிலே.....

பகுத்தறிவை புதைத்து விட்டு
படித்தவை தான் மறந்து
பழிவாங்கும் நோக்குடனே
பிறர் - நேயமில்லா நெஞ்சங்களும்,
போட்டி பொறாமை அதிகரித்து
போர்கள் பல தொடுத்து
பதவி வெறி பிடித்து
பணிதனை மறந்தவரும்

எம் கண் எதிரே
என்றும் காட்சி தந்து,
எம்மை கவலையுற செய்திடும்
இவற்றையெல்லாம் எங்கு கற்றாரோ?

மனிதா! நீ திருந்த மாட்டாயா?
மற்றவனை மதிக்க மாட்டாயா?
சந்தோஷமாய் வாழ வேண்டாமா?
தீமைதனை எதிர்த்து
நன்மை தனை நிலைநாட்ட
இன்றே விரைந்திடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## FAITH IN ACTION

Faith is something closely intermingled with humanity. Though the concept of faith is seen or understood in the religious point of view, we should not deny the fact that faith is essential to each and every human person who has a vision or goal in his life.

St. James says, "Faith by itself, if it has no works is dead" (James 2:17). Both the Scriptures and the teaching of the Church very clearly affirm the above statement. It is because of the great biblical figures' witnessing lives the Church is still moving towards its fulfilment. Being the active members of the Church we too are called to be active participants in the Church by our day-to-day activities based on our strong faith.

## CHURCH IS A PEOPLE OF GOD:

IN VIEW OF SECOND VATICAN COUNCIL

The second Vatican council prefers to use two symbols to the Church; firstly the Church is a mystical body of Christ and the Church is a people of God. The idea of ecclesiology of communion put in essence the whole matters dealt about the Church. The understanding of Church as the people of God is a ground breaking effort made by Vatican II from the pyramidal structure which was prevailing earlier. It is not a new way of seeing but a renewed approach. For, God chose the people of Israel as a people of God and the redemption of Christ also carried out for the whole human race. Understanding the plan of God Church also urges its members to live in communion with everybody. Second Vatican council goes beyond and says that all humans are social beings in nature, without the relationship with others they can't live or grow in their talents. Thus it invites the whole human race to community



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

living. The plan of salvation is to bring all human beings as one family. Church becoming the people of God is a sign of the final destiny that is, being united with God for eternity in the Kingdom of God.

The church removing the gap between the clergy and laity calls them as people of God. God's call is not to be scattered islands but to be a united family. The council invites us to go beyond all the boundaries to create a united community which can be the sign of the Kingdom of God. The council opens the directions to go forward towards mission. It is our duty to find ways and means to fulfil the very important mission.

## CHURCH IS A WORSHIPPING COMMUNITY

Our faith is expressed through signs. Liturgical celebrations are visible signs of our faith. Signs are integral part of our worship. Every sacrament is a sign of grace.

The sacraments are the sources and centre of our worship. The church is nourished and strengthened by the sacraments. The nature of the church is visible through liturgical celebrations. The early Christian community is the best example for a worshipping community.

If the church needs to be a true worshipping community the liturgical celebrations should become relevant to life. The performance of ritual does not suffice for a meaningful liturgy. We cannot separate liturgy from life. There cannot be a contradiction between liturgy and life. Our life is the best offering that we can give to God. In order to make our life as a worthy gift to God we need to make our liturgy meaningful. If our liturgy ought to become meaningful we need to understand the signs and rituals and participate in it actively and consciously.

The purpose of the sacraments is to give true worship to God and to build up the church which is the body of Christ. The church grows and becomes strong in faith through the sacraments. A true fellowship is built up through the liturgy. It is our worship that brings us together and makes us into



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

one community. A fraternal concern and respect for each other should become possible through a meaningful liturgy. Hence a worshipping community is a loving community.

## CHURCH - WITNESSING COMMUNITY

The local Church of Jaffna now attempts to renew itself to be more of a witnessing Community. This witnessing step constitutes two dimensions viz interior renewal and expression of it through charitable acts. Internal renewal means the self-transcendence, that occurs in four levels, viz, intellectual conversion that purposes the removal of biases and prejudices, moral conversion that purposes the shift from emotional bondage towards good moral values, psychic conversion that aims at healing the scars caused by past ethnic war most importantly the Spiritual conversion that bases itself on hope and altruistic love.

The mission of Church is the mission of Christ. Social ethics acquired an important place in Jesus' teachings. Social ethics was very much part of the new relationship with God the Father. His mission basically appealed social Justice in all spheres of life. In the Old Testament, Yahweh was the king of Israel and Justice prevailed throughout. All the parables and miracles in the Gospels manifest the teachings of the moral dimension of Jesus and deprivation of basic needs of the poor was considered as crime. Social Doctrines of the Church speak of the social issues. In response to the social evils that prevailed time to time, the Church issues the documents insisting on social ethics. Working for Justice is now considered as an integral part of evangelization.

The post war situation in Jaffna is identified with conflicts. The effects caused by social deprivation made an impact at two perspectives viz, psycho social impact and socio cultural impact. Mental retardation, increase of unwed mothers, dependency, deviant sub-cultures of youth, suicides, abortions etc. are realities of Jaffna. The Church of Jaffna cannot be indifferent towards these problems. These Problems call for an intervention of the Church of Christ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RENEWAL OF THE CHURCH

The second Vatican council has been a quantum leap in the history of the Catholic Church. It opened up new awareness for the church to think and act in the light of the sings of the time. The deep theological review on the sacraments is claimed to an example of the prolific contribution rendered by the council.

The Church is a sacrament in Jesus Christ, therefore, when the people are gathered to celebrate the sacraments, they witness to the sacramentality of the Church. The community of believers also professes their witnessing life in Christ, with Christ and through Christ by the celebration of the sacraments. The sacraments do not serve only as the means of grace, but also they facilitate the growth, formation and the strengthening of the sacramental life of the Church. The refined theological outcome of the council needs consistent development for the internal and external renewal of the Church.

## POPE ST. JOHN XXIII


Angelo Giuseppe Roncalli (Pope John XXIII), the third of thirteen children, was born on November 25, 1881 at Sottoil Monte (Bergamo). He took the name of John in honour of the precursor and the beloved disciple—but also because it was the name of a long line of popes whose pontificates had been short. In 1958 he was elected as pope. In his first public address Pope John expressed his concern for reunion with separated Christians and for world peace. Less than three months after his election he announced that he would hold a diocesan synod for Rome, convoke an ecumenical council for the universal Church, and revise the Code of Canon Law.

The synod, the first in the history of Rome, was held in 1960; Vatican Council II was convoked in 1962; and the Pontifical Commission for the Revision of the Code was appointed in 1963. His progressive encyclical,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mater et Magistra, was issued in 1961 to commemorate the anniversary of Leo XIII's Rerum novarum. Pacem in terris, advocating human freedom and dignity as the basis for world order and peace, came out in 1963. On 3 September 2000, John XXIII was declared "Blessed" alongside Pope Pius IX by Pope John Paul II and on Sunday, 27 April 2014, John XXIII and Pope John Paul II were declared saints by Pope Francis on Divine Mercy Sunday.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல

அருட்தந்தை
மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்



அருட்தந்தை
ப.ஜோ.ஜெபரட்ணம்.



எமது தூய பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் பல ஆண்டுகளாக நல் உருவாக்குனர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றி இறுதி எட்டு வருடங்களாக அதிபராகவும் பணியாற்றிய அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார்கட்கும் மற்றும் நான்கு வருடங்களாக துணை அதிபராகவும் பணியாற்றிய அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார்கட்கும் எமது இதயத்தின் ஆழத்தில் இருந்து பலகோடி நன்றிகளை தெரிவிப்பதோடு, இவர்களின் எதிர்கால பணிக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வரவேற்கின்றோம்

அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன்



எமது குருத்துவக்கல்லூரியின் புதிய அதிபராக 24.02.2016 அன்று பொறுப்பேற்ற அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன் அவர்களை எமது குருத்துவக்கல்லூரி அருட்தந்தையர்கள், விரிவுரையாளர்கள், ஆசான்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர் அனைவரும் இணைந்து இன்முகத்துடன் வரவேற்பதோடு, இவரின் பணி சிறக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 200/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
Euro 18

தனிப்பிரதி 80/=


தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145


## IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 200/=
Foreign (Incl.postage) U.S.$ 20
Euro 18
Single Copy Rs.80/=


Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org